மேலும் அவளுக்கே உரித்தான அமாவாசை, பவுர்ணமி திதிகள் மற்றும் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமைகளும் இவளை ஆராதிப்பதற்குச் சிறந்த நாட்களாகும்.

காயத்திரி (சகல காரியங்கள் வெற்றி அடைய)
ஓம் பூர்புவஸ்ஸுவஹ் தத்ஸ விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோனஹ் ப்ரசோதயாத்

துர்கை (ராகுதோஷ நிவர்த்திக்காக)
ஓம் காத்யாயனாய வித்மஹே கன்யகுமரி தீமஹி தன்னோ துர்கிஹ் ப்ரசோதயாத்
ஓம் சிம்மத் வஜாய வித்மஹே சூல ஹஸ்தாய தீமஹி தன்னோ மாரி ப்ரசோதயாத்

ராகுவிற்கும் துர்க்கை வழிபாட்டிற்கும் ஒரு சம்பந்தம் இருக்கிறது. ராகு கிரகத்தின் அதிதேவதை துர்க்கை, அதனால்தான் ராகு காலத்தில் துர்க்கை வழிபாடு நடக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை ராகு கால வழிபாட்டிற்கு உகந்த நாளாகும்.ராகுவுக்கு உடலில்தான் விஷம் இருக்கிறதேயன்றி, வாலில் அமிர்தம் இருக்கிறது.ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியன் மறையும் அந்திநேரத்திற்கு முன்பு, ராகுவின் வால் பாகம் அமிர்தமாக இருக்கும்.அதாவது ஞாயிறன்று மாலை 4.30 மணி முதல் 6 மணிக்குள் துர்க்கையை வழிபட்டால் கோரிய பிராத்தனைகள் நிறைவேறும் என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் பிணி தீர வேண்டுமானால், ஞாயிறு மாலை 4.30 - 6.00 ராகு கால வேளையில், துர்க்கை தனித்திருக்கும் ஆலயத்தில், ஒரு எலுமிச்சை பழத்தினை இரண்டாக நறுக்கி, சாறு பிழிந்து, விளக்கு போல் திருப்பி, நெய் ஊற்றி, அதன் பின்னரே 5 இழைகள் கொண்ட நூல் திரி போட்டு அதன் நுனியில் சிறிது கற்பூரம் வைத்து, விளக்கு ஏற்றவேண்டும். அடுத்தவர் ஏற்றிய விளக்கில் ஏற்றக்கூடாது.

விளக்கினை ஜோடியாக தான் வைக்க வேண்டும். தீப ஒளி அம்மனை நோக்கிய வாறு விளக்கு இருக்க வேண்டும்.

இந்த பூஜையின் போது, அம்மனுக்கு மல்லிகை பூ அல்லது மஞ்சள் சாமந்தி பூ மட்டுமே வாங்க வேண்டும். அம்மனுக்கு அர்ச்சனை செய்வதாக இருந்தால் சாமி பெயரில் அர்ச்சனை செய்த பின்னரே, விளக்கு ஏற்ற வேண்டும். விளக்கு ஏற்றிய பின்னரே 3 சுற்றுகள், வலம் வந்து நமஸ்கரிக்க வேண்டும். அதன் பின்னர் 20 நிமிடங்கள் அமர்ந்திருக்க வேண்டும்.

அப்பொழுது, துர்கை பாடல்கள் சொல்லியவாறு இருக்கவேண்டும். 21 வது நிமிடம், கோயிலைவிட்டு வெளியேறி விட வேண்டும். வழியில், பிசையிடக்கூடாது. ராகுவால் உண்டான கஷ்ட நிவர்த்தி பூஜை ஆனதால் நவகிரகம் சுற்ற வேண்டாம்.

வீடு திரும்பி, வீட்டில் பூஜை அறையில், ஒரு நெய் தீபம் ஏற்றி, 5 ஊதுபத்தி ஏற்றி, கற்பூரம் ஆராதனை செய்ய வேண்டும். வீட்டில் ஏற்றிய தீபம் அணையும்வரை, வெளியில் செல்லக்கூடாது. இவ்வாறு 9 வாரங்கள் செய்வதால் பலன் கிட்டும்.

# ஜெய ஜெய தேவி

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்கா தேவி சரணம்

துர்க்கை அம்மனை துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளை தரிசனம் கண்டால் போதும் ----2

கர்ம வினைகளும் ஓடும் சர்வ மங்களம் கூடும் (ஜெய ஜெய தேவி)

பொற் கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றி வரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்கும பொட்டும் வெற்றி பாதையை காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய்போல் நம்மை காப்பவளே
(ஜெய ஜெய தேவி)
சங்கு சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்கக் கைகளில் ஏந்தி நிற்பாள் அம்மாதா தங்கக் கைகளில் ஏந்தி நிற்பாள்
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள் திங்களை முடி மேல் சூடி நின்றாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள் மங்கையர்க்கரசியும் அவளே அங்கயற்கண்ணியும் அவளே
(ஜெய ஜெய தேவி)
கனக துர்கா தேவி சரணம்! கனக துர்கா தேவி சரணம்! கனக துர்கா தேவி சரணம்!

# திருவிளக்கு பஜனை

திருவிளக்கே திருவிளக்கே தேவி பராசக்தி திருவிளக்கே
தேவியின் வடிவே திருவிளக்கே தேவியே உனக்கு நமஸ்காரம்

இருளை அகற்றும் திருவிளக்கே இன்பம் அளிக்கும் திருவிளக்கே
எங்கும் ஒளிதரும் திருவிளக்கே லக்ஷ்மி உனக்கு நமஸ்காரம்

மங்கள ஜோதியாம் திருவிளக்கே மாலையில் ஒளி தரும் திருவிளக்கே

காலையில் ஒளிதரும் திருவிளக்கே சரஸ்வதி உனக்கு நமஸ்காரம்

திருமகள் வடிவே திருவிளக்கே தேவரும் பணியும் திருவிளக்கே
தெள்ளிய ஜோதியே திருவிளக்கே சாரதே உனக்கு நமஸ்காரம்

அஷ்டலக்ஷ்மி வடிவே திருவிளக்கே ஆனந்த நர்த்தினி திருவிளக்கே
ஆலய பூஷணி திருவிளக்கே ஆதிபராசக்தி நமஸ்காரம்

பாக்கிய லக்ஷ்மியாம் திருவிளக்கே பக்தியை அளித்திடும் திருவிளக்கே
பதவியைத் தந்திடும் திருவிளக்கே பவானி உனக்கு நமஸ்காரம்

ஜெகமெல்லாம் விளங்கும் திருவிளக்கே ஜெகதீஸ்வரி வடிவே திருவிளக்கே
அழகை அளிக்கும் திருவிளக்கே அம்மா உனக்கு நமஸ்காரம்

சௌந்தர்ய ரூபிணி திருவிளக்கே சந்தான பலம்தரும் திருவிளக்கே
சம்பத்தை அளிக்கும் திருவிளக்கே சக்தியே உனக்கு நமஸ்காரம்
ராஜ ராஜேஸ்வரிக்கு நமஸ்காரம்

## மங்கள ரூபிணி

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பக காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

கானுறு மலரெனக் கதிர் ஒளிர் காட்டிக் காத்திட வந்தவளே
தானுறு தவஒளி தாரொளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எம் குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்த நற் துர்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

தண தண தந்தன தவிலொளி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிரொளி வீசிடக் கண்மணி நீ வருவாய்
பண பண பம்பண பறையொளி கூவிட கண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல்குமரியே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நற்சக்தி எனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

எண்ணிய படி நீயருளிட வருவாய் எம்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளியதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய துர்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

## ஞாயிற்றுக்கிழமை

ஞாயிற்றுக்கிழமை நாள்தோறும் மங்கையர் யாவரும் கூடிடுவோம்
எலுமிச்சை தீபத்தை ஏற்றிடுவோம் மகிழ்ச்சியுடன் பூஜை செய்திடுவோம்
நாம் இனிமையுடன் வரம் கேட்டிடுவோம் (ஞாயிற்றுக்)

பலப்பல மலர்களை பறித்திடுவோம் பலப்பல பூஜைகளை செய்திடுவோம்
பலப்பல வரங்களை கேட்டிடுவோம் ஏகாம்பர துர்க்கையை துதித்திடுவோம்
சுந்தர வதனி மீனாட்சி சுகுண மனோகரி காமாட்சி
விஜயம் தருவாள் விசாலாட்சி வீணையை மீட்டுவாள் சரஸ்வதி
(ஞாயிற்றுக்)

ராஜராஜேஸ்வரி நமஸ்காரம் லலிதாம்பிகையே நமஸ்காரம்
துர்க்கா லக்ஷ்மியே நமஸ்காரம் புவனேஸ் வரியே நமஸ்காரம்
அன்னபூர்ணேஸ்வரியே நமஸ்காரம் காமேஸ்வரியே நமஸ்காரம்
பக்தியுடனே உன்னை நாடி வந்தோம் நாங்கள்
பண்புடனே உன்னைப் பார்க்க வந்தோம் (ஞாயிற்றுக்)

வருவாய் வருவாய் நீயம்மா தருவாய் தருவாய் சுகம் தருவாய்
அம்மா நீ எம்மை கை விடாமல் ஆசிகள் கூறி அனுப்புவாயே
ஏகாம்பரேஸ்வரி என்றும் நீயே ஏழை என்னை ஏற்றுக்கொள்வாய்
என்றும் உன்னை மறவேனே என்னை ஏகாந்த முடனே ஏற்றுக்கொள்வாய்
அம்மா தாயே சரணமம்மா அன்பால் என்னை அணைத்துக் கொள்வாய்
ஆதிபராசக்தி நீயம்மா அருளைக் கொடுத்து காப்பாய் (ஞாயிற்றுக்)

## சரஸ்வதி அஷ்டோத்திரம்

ஓம் ஸரஸ்வத்யை நம: ஓம் மஹா பத்ராயை நம:
ஓம் மஹா மாயாயை நம: ஓம் வரப்ரதாயை நம:
ஓம் ஸ்ரீ ப்ரதாயை நம: ஓம் பத்ம நிலயாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம: ஓம் பத்ம வக்த்ராயை நம:
ஓம் சிவா நுஜாயை நம: ஓம் புஸ்தக ப்ருதே நம:

ஓம் ஜ்ஞாந முத்ராயை நம:
ஓம் பராயை நம:
ஓம் மஹா வித்யாயை நம:
ஓம் மஹாச்ரயாயை நம:
ஓம் மஹோ போகாயை நம:
ஓம் மஹா பாகாயை நம:
ஓம் திவ்யாங்காயை நம:
ஓம் மஹா காள்யை நம:
ஓம் மஹா காராயை நம:
ஓம் பீதாயை நம:
ஓம் விச்வாயை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் சந்த்ரவதநாயை நம:
ஓம் ஸாவித்ர்யை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் வாக் தேவ்யை நம:
ஓம் தீவ்ராயை நம:
ஓம் மஹாபலாயை நம:
ஓம் பாரத்யை நம:
ஓம் கோவிந்தாயை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் விந்த்ய வாஸாயை நம:
ஓம் சண்டிகாயை நம:
ஓம் ப்ராஹ்ம்யை நம:
ஓம் ஸௌதாமிந்யை நம:
ஓம் ஸுபத்ராயை நம:
ஓம் ஸுவாஸிந்யை நம:
ஓம் விநித்ராயை நம:
ஓம் வித்யா ரூபாயை நம:
ஓம் ப்ரஹ்மஜாயை நம:
ஓம் த்ரயீ மூர்த்யை நம:
ஓம் திரிகுணாயை நம:
ஓம் சும்பாஸுர ப்ரமதிந்யை நம:
ஓம் ஸ்வராத் மிகாயை நம:
ஓம் சாமுண்டாயை நம:
ஓம் முண்டகாய ப்ரஹரணாயை நம:
ஓம் ஸர்வ தேவ ஸ்துதாயை நம:
ஓம் ஸுராஸுரநம:ஸ்க்ருத தாயை நம:
ஓம் கலாதராயை நம:
ஓம் வாக் தேவ்யை நம:
ஓம் வாராஹ்யை நம:

ஓம் ரமாயை நம:
ஓம் காமரூபாயை நம:
ஓம் மஹாபாதக நாசிந்யை நம:
ஓம் மாலிந்யை நம:
ஓம் மஹா புஜாயை நம:
ஓம் மஹாத்ஸாஹாயை நம:
ஓம் ஸுரவந்தி தாயை நம:
ஓம் மஹா பாசாயை நம:
ஓம் மஹாங்கு சாயை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் வித்யுந் மாலாயை நம:
ஓம் சந்த்ரிகாயை நம:
ஓம் சந்த்ரலேகா விபூஷி தாயை நம:
ஓம் ஸுரஸாயை நம:
ஓம் திவ்யாலங்கார பூஷிதாயை நம:
ஓம் வஸுதாயை நம:
ஓம் மஹாபத்ராயை நம:
ஓம் போக தாயை நம:
ஓம் பாமாயை நம:
ஓம் கோமத்யை நம:
ஓம் ஜடிலாயை நம:
ஓம் விந்தயாசல விராஜி தாயை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் ப்ரஹ்மஜ்ஞானைஸாத் நாயை நம:
ஓம் ஸுதா மூர்த்யை நம:
ஓம் ஸுரபூஜிதாயை நம:
ஓம் ஸுநாஸாயை நம:
ஓம் பத்மலோசநாயை நம:
ஓம் விசாலாக்ஷ்யை நம:
ஓம் மஹா பலாயை நம:
ஓம் த்ரிகால ஜ்ஞாயை நம:
ஓம் சாஸ்தர ரூபிண்யை நம:
ஓம் சுபதாயை நம:
ஓம் ரக்த பீஜ நிஹந்த்ர்யை நம:
ஓம் அம்பிகாயை நம:
ஓம் தூம்ர லோசந மர்தநாயை நம:
ஓம் ஸௌம்யாயை நம:
ஓம் காளராத்ர்யை நம:
ஓம் ரூப ஸௌபாக்யதாயிந்யை நம:
ஓம் வரா ரோஹாயை நம:
ஓம் வாரிஜால நாயை நம:

ஓம் சித்ராம்பராயை நம:
ஓம் சித்ரமால்ய விபூஷி தாயை நம:
ஓம் காம ப்ரதாயை நம:
ஓம் வித்யாதாரஸுபூஜிதாயை நம:
ஓம் நீல புஜாயை நம:
ஓம் சுதராநத ஸாம் ராஜ்யாயை நம:
ஓம் நிரஞ்ஜ நாயை நம:
ஓம் நீல ஜங்க்காயை நம:
ஓம் சிவாத்மிகாயை நம:
ஓம் சித்ர கந்தாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ச்வேதாந நாயை நம:
ஓம் சதுர்வர்க பலப்ரதாயை நம:
ஓம் ரக்த மத்யாயை நம:
ஓம் ஹம்ஸாஸ நாயை நம:
ஓம் ப்ரஹம விஷ்ணு நம:

நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

# ஸ்ரீ லட்சுமி அஷ்டோத்திரம்

ஓம் ப்ரக்ருத்யை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ச்ரத்தாயை நம:
ஓம் ஸுரப்யை நம:
ஓம் வாசே நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் ஸுதாயை நம:
ஓம் ஹிரண் மய்யை நம:
ஓம் நித்ய புஷ்டாயை நம:
ஓம் அதித்யை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் வஸுதாரிண்யை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் க்ஷிரோதஸம்ப வாயை"
ஓம் புத்யை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் லோகசோகவிநாசிந்யை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பக்மோத்பவாயை நம:
ஓம் பத்மனாப ப்ரியாயை நம:
ஓம் பத்ம மாலாதராயை நம:
ஓம் பத்மிந்யை நம:
ஓம் புண்யகந்தாயை நம:
ஓம் விக்ருத்யை நம:
ஓம் ஸர்வ பூதஹிதப்ரதாயை நம:
ஓம் விபூத்யை நம:
ஓம் பரமாத்மிகாயை நம:
ஓம் பத்மாலயாயை நம:
ஓம் சுசயே நம:
ஓம் ஸ்வதாயை நம:
ஓம் தன்யாயை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் விபாவர்யை நம:
ஓம் தித்யை நம:
ஓம் வஸுதாயை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் காமாயை நம:
ஓம் அனுக்ரஹபதாயை நம:
ஓம் அநகாயை நம:
ஓம் அசோகாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் தர்ம நிலயாவை நம:
ஓம் லோகமாத்ரே நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பத்மஸுந்தர்யை நம:
ஓம் பக்த முக்யை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் பத்மகந்திந்யை நம:
ஓம் ஸுப்ரஸந்நாயை நம:

ஓம் ப்ரஸாதாபி முக்யை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் சந்த்ரவதநாயை நம:
ஓம் சந்த்ராயை நம:
ஓம் சந்த்ர ஸஹோதர்யை நம:
ஓம் சதுர்ப் புஜாயை நம:
ஓம் சந்த்ர ரூபாயை நம:
ஓம் இந்திராயை நம:
ஓம் இந்து சீதலாயை நம:
ஓம் ஆஹ்லாத ஜநந்யை நம:
ஓம் புஷ்ட்யை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் சிவகர்யை நம:
ஓம் ஸத்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் விச்ய ஜநந்யை நம:
ஓம் புஷ்ட்யை நம:
ஓம் தாரித்ர்ய நாசிந்யை நம:
ஓம் ப்ரீதி புஷ்கரிண்யை நம:
ஓம் சாந்தாயை நம:
ஓம் சுக்லமாம்யாம்பரரயை நம:
ஓம் ச்ரியை நம:
ஓம் பாஸ்கர்யை நம:
ஓம் பில்வ நிலாயாயை நம:
ஓம் வராய ரோஹாயை நம:
ஓம் யச்சஸ் விந்யை நம:
ஓம் வாஸுந்தராயை நம:
ஓம் உதா ராங்காயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேமமாலின்யை நம:
ஓம் த ந தாந்யகர்யை நம:
ஓம் ஸித்தயே நம:
ஓம் ஸத்ரைணஸெம்யாயை நம:
ஓம் சுபப்ரதாயை நம:
ஓம் ந்ருப வேச்மகதாநந்தாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை நம:
ஓம் வஸுப்ரதாயை நம:
ஓம் சுபாயை நம:
ஓம் ஹிரண்ய ப்ராகாராயை நம:
ஓம் ஸமுத்ர தநயாயை நம:
ஓம் ஜயாயை நம:
ஓம் மங்கள தேவதாயை நம:
ஓம் விஷ்ணு வக்ஷஸதலஸ்தி நம:
ஓம் விஷ்ணு பத்ந்யை தாயை நம:
ஓம் பரஸ்ந்நாக்ஷ்யை நம:
ஓம் நாராயண ஸமாச்ரிதாயை நம:
ஓம் தாரித்ர்ய த்வம்ஸிந்யை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் ஸர்வோபத்ரவ நிவாரிண்யை நம:
ஓம் நவ துர்காயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவாத்மி நம:
ஓம் த்ரிகால ஜ்நாநஸம் காயை பந்நாயை நம:
ஓம் புவனேச்வர்யை நம:

ஸ்ரீ லட்சுமி அஷ்டோத்ர சத நாமாவளி சம்பூர்ணம்
குங்கும அர்ச்சனை மற்றும் புஷ்பங்களால் அர்ச்சிக்க, வீட்டில் லட்சுமி கடாட்சம் – மகாலட்சுமியின் பார்வை பட்டு எல்லா வளமும் பெறுவீர்களாக

## துர்கா அஷ்டோத்ரம்

ஓம் தேவ்யை நம:
ஓம் துர்காயை நம::
ஓம் த்ரிபுவநேச்வர்யை நம:
ஓம் யசோதா கர்பஸப்பூதாயை நம:
ஓம் நாராயண வரப்ரி யாயை நம:
ஓம் நந்த கோப குல ஜாதாயை நம:
ஓம் மங்கல்யாயை நம:
ஓம் குலவர்த்திந்யை நம:

ஓம் கம்ஸவித்ராவண கர்யை
ஓம் அஸூரக்ஷயங்கர்யை நம:
ஓம் சிலாதட விநிக்ஷிப் தாயை நம:
ஓம் ஆகாசகாமிந்யை நம:
ஓம் வாஸூதேவ பகிந்யை நம:
ஓம் திவ்யமால்ய விபூஷிதாயை நம:
ஓம் திவ்யாம்பரதராயை நம:
ஓம் கட்க கேடக தாரிண்யை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் பாப தாரிண்யை நம:
ஓம் வரதாயை நம:
ஓம் கிருஷ்ணாயை நம:
ஓம் குமார்யை நம:
ஓம் ப்ரஹ்ம சாரிண்யை நம:
ஓம் பாலார்க ஸத்ருசாகா ராயை நம:
ஓம் பூர்ண சந்த்ரநிபாந நாயை நம:
ஓம் சதுர் புஜாயை நம:
ஓம் சதுர் வக்த்ராயை நம:
ஓம் பீந ச்ரோணி பயோத ராயை நம:
ஓம் மயூர பிச்ச வலயாயை நம:
ஓம் கேயூராங்கத தாரிண்யை நம:
ஓம் க்ருஷ்ணச்சவிஸமாயை நம:
ஓம் க்ருஷ்ணாயை ஸங்கர்ஷண ஸமாந நாயை நம:
ஓம் இந்த்ரத்வஜ ஸம நம:
ஓம் பாஹுதாரிண்யை நம:
ஓம் பாத்ர தாரிண்யை நம:
ஓம் பங்கஜ தாரிண்யை நம:
ஓம் கண்டா தாரிண்யை நம:
ஓம் பாச தாரிண்யை நம:
ஓம் தநுர் தாரிண்யை நம:
ஓம் மஹா சக்ர தாரிண்யை நம:
ஓம் விவிதாயுத தராயை நம:
ஓம் குண்டல பூர்ணகர்ண விபூஷிதாயை நம:
ஓம் சப்ந்ர விஸ்பர்திமுக விராஜிதாயை நம:
ஓம் முகுடவிராஜி தாயை நம:
ஓம் சிகிபிச்ச த்வஜ விராஜிதாயை நம:
ஓம் கௌமார வ்ரத தராயை நம:
ஓம் த்ரிதிவ பாவயிர்த்யை நம:
ஓம் த்ரிதச பூஜிதாயை நம:
ஓம் த்ரை லோக்ய ரக்ஷிண்யை நம:
ஓம் மஹிஷாஸூர நாசிந்யை நம:
ஓம் ப்ரஸந் நாயை நம:
ஓம் ஸூரச்ரேஷ்டாயை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் பத்மிந்யை நம:
ஓம் விஜயாயை நம:
ஓம் ஸங்க்ராம ஜயப்ரதாயை நம:
ஓம் வரதாயை நம:
ஓம் விந்திய வாஸிந்யை நம:
ஓம் காளயை நம:
ஓம் காள்யை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ஸீதுப்ரியாயை நம:
ஓம் மாம்ஸப்பிரியாயை நம:
ஓம் பசு ப்ரியாயை நம:
ஓம் பூதா நுஸ்ருதாயை நம:
ஓம் வரதாயை நம:
ஓம் காமசாரிண்யை நம:
ஓம் பாப பரிண்யை நம:
ஓம் கீர்த்யை நம:
ஓம் ச்ரியை நம:
ஓம் த்ருத்யை நம:
ஓம் ஸித்த்யை நம:
ஓம் ஹ்ரியை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ஸந்தத்யை நம:
ஓம் மத்யை நம:
ஓம் ஸந்த்யாயை நம:
ஓம் ரார்த்யை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் நித்ராயை நம:
ஓம் ஜயோத்ஸ்நாயை நம:
ஓம் காந்த்யை நம:
ஓம் க்ஷமாயை நம:
ஓம் தயாயை நம:
ஓம் பந்தந நாசிந்தை நம:
ஓம் மோஹ நாசிந்யை நம:
ஓம் புத்ராப ம்ருத்யுநாசிந்யை நம:
ஓம் தநக்ஷய நாசிந்யை நம:
ஓம் வ்யாதி நாசிந்யை நம:

ஓம் ம்ருத்யு நாசிந்யை நம: ஓம் பய நாசிந்யை நம:
ஓம் பத்ம பத்ராக்ஷ்யை நம: ஓம் துர்காயை நம:
ஓம் சரண்யாயை நம: ஓம் பக்த வத்ஸலாயை நம:
ஓம் ஸௌக்யதாயை நம: ஓம் ஆரோக்ய தாயை நம:
ஓம் ராஜ்ய தாயை நம: ஓம் ஆயுர் தாயை நம:
ஓம் வபுர் தாயை நம: ஓம் ஸுத தாயை நம:
ஓம் ப்ரவாஸ ரக்ஷிகாயை நம: ஓம் நகர ரக்ஷிகாயை நம:
ஓம் ஸங்க்ராம ரக்ஷிகாயை நம: ஓம் சத்ருஸங்கட ரக்ஷிகாயை நம:
ஓம் அடா வீதுர்க காந்தார ரக்ஷிகாயை நம: ஓம் ஸாகர கிரி ரக்ஷிகாயை நம:
ஓம் ஸர்வகார்ய ஸித்திப்ரதாயி காயை நம: ஓம் துர்கா பரமேச்வர்யை நம:

# துர்க்கா ஸ்துதி

(ராகுகாலத்திற்குரியது) - மூலமந்திரம்
ஸ்ரீ மங்கள சண்டிக ஸ்தோத்ரம்

ஸாரே மங்கள தாரே பாரேச ஸர்வ கர்மணாம்
ப்ரதி மங்களா தாரேச பூஜ்யே மங்கள சுகப்ரதே
மங்களத்திற்கு ஆதாரமானவளே ! மங்கள வாரம் தோறும் (செவ்வாய்க் கிழமை தோறும்) பூஜிக்கத் தக்கவளே மங்களத்தை அருளும் அன்னையே உன்தாள் பணிகின்றேன்.

தேவீம் ÷ஷாடஸ வர்ஷியாம் ஸுஸ்திர யௌவனாம்
பிம்போஷ்டீம் ஸுதீதம் சுந்தரம் சரத் பத்ம நிபாநநாம்
தேவியை என்றும் பதினாறு வயதுடைய நித்யயௌவன உருவமுடைய-வளாகவும், அழகிய உதடுகளில் அருள் வழியும் புன்னகையுடன் சரத் காலத்து நிலவொளியில் தாமரை மலர் மீது அமர்ந்திருப்பவளாக தியானிக்கிறேன்.

ஸ்வேத சம்பக வர்ணாம் ஸுநீலோத்லப லோசநாம்
ஜகதாத்ரீம் சதாத்ரீம் ச ஸந்வேப்ய : ஸர்வ சம்பதாம்
காயாம்பு வண்ண மேனியுடன் நீலோத்பல மலர் போன்ற கண்களுடன் விளங்கும் அன்னை, உலகை ஈன்று சகல சௌபாக்கியங்களையும் அளிக்கின்றாள்.

ஸ்ம்ஸார சாகரே கோரே ஜ்யோதிரூபாம் சதாபஜே
தேவ்யாச்ச த்யான மித்யேவம் ஸ்தவ நம் ச்ருயதாம் முனே
பயங்கரமான பிறவிப் பெருங்கடலைத் தாண்ட, மணி விளக்காய் வழிகாட்டும் தேவியின் பாதங்களை நினைப்பதே சிறந்த மார்க்கமாகும்.

மங்கள மங்களார் ஹே ச சர்வ மங்கள மங்களே
ஸதாம் மங்களதே தேவி ஸர்வேஷாம் மங்களாலயே
மங்களத்தை தரும் மங்கள நாயகியே! என்றென்றும் மங்கள வாழ்வை அளிப்பாயாக

பூஜ்ய மங்கள வாரே ச மங்களா பீஷ்ட தேவதே
பூஜ்யே மங்கள பூபஸ்ய மனுவம்சஸ்ய ஸந்தகம்
பூஜிக்க தக்க மங்கள நாயகியே ! சுபத்தை அளிக்கும் தேவியே! மனித வர்க்கத்திற்கு என்றும் நல்வாழ்வை நல்குவாயாக !

மங்களா திஷ்டாத்ரு தேவி மங்களநாம்ச மங்களே
ஸம்ஸார மங்களா தாரே மோக்ஷ மங்கள தாயினி
மங்களத்தைத் தரும் அருள் நோக்கு உடையவளே! மங்களமே உருவானவளே உலகின் நல்வாழ்வுக்கு ஆதாரமானவளே ! மாந்தருக்கு மோக்ஷத்தை அளிப்பவளே !

ஸாரே மங்கள தாரே பாரேச ஸர்வ கர்மணாம்
ப்ரதி மங்களா தாரேச பூஜ்ய மங்கள சுகப்ரதே
மங்களத்திற்கு ஆதாரமானவளே மங்கள வாரம் தோறும் (செவ்வாய்கிழமை தோறும்) பூஜிக்கத்தக்கவளே மங்களத்தை அருளும் அன்னையே உன் தாள் பணிகின்றேன்.

## பலஸ்ருதி

ஸ்தோத்ரேனாநேந சம்பிஸ் ச ஸ்துத்வா மங்கள சண்டிகாம்
ப்ரதி மங்கள வாரே ராகு காலெள பூஜரம் தத்வா கத: சிவ
மங்கள சண்டிகையான அன்னையை மங்கள வாரம் தோறும் ராகு காலத்தில் பூஜித்து துதித்தால் சகலநன்மைகளையும் அளிப்பாள்.

தேவ்யாஸ் ச மங்கள ஸ்தோத்ரம் ய ச்ருணோதி ஸமாஹித
தத்மங்களம் பவேத் தஸ்ய நபவேத் தத் மங்களம்
வர்த்ததே புத்ர பௌத்ரஸ்ச மங்களம் ச திநே திநே
தேவியைப் போற்றும் இந்த மங்கள ஸ்துதியை ஓதுவதால் உலகில் கிடைக்காத பாக்கியமே இல்லை, சகல சம்பத்துகளும் வம்ச விருத்தியும் எண்ணற்ற பாக்யங்களும் நாளுக்கு நாள் பெருகும் என்பதில் ஐயமே இல்லை.

பவானி த்வம் தாஸேமயீ விதிர க்ருஷ்டியும் ஸகருணாம்
இதி ஸ்தோதும் வாஞ்சன் கதயதிபவானி த்வமிதிய:
தவைத த்வம் தஸ்மை திசஸி நிஜ ஸாயுஜ்ய பதவீம்
முகுந்த ப்ரஹ்மேந்திர ஸ்புட மகுட நீராஜித பதாம்
ஹே பவானி அடிமையாகிய என்னிடம் கருணையுடன் கூடிய பார்வையை நீ செலுத்தி அருள்வாயாக என்று எவனொருவன் துதிசெய்ய விரும்பி பவானி நீ என்ற இரண்டு வார்த்தைகளை சொன்ன மாத்திரம் விஷ்ணு, பிரம்மா, இந்திரன் ஆகியவர்களின் கிரீட ஒளியால் நிராஜனம் செய்ய பெற்ற திருவடிகளை- யுடைய உனது ஸாயுஜ்ய பதவியை அவனுக்கு அளிக்கிறாய்.

பன்னிரு ராசி நேயர்கள் ராகு தோஷம் நீக்கி ஸ்ரீதுர்கையின் அருள் கிடைக்க திருநாமம்
ஓம் துர்லபாம் துர்கமாம் துர்காம்

துக்க ஹந்த்ரீம் ஸுகப்ரதாம்
துஷ்டதூராம் துராசார ஸமனீம்
தோஷவர்ஜிதாம் ஜெயப்ரதாம் ஓம்
(தன, ஸித்தி, ஞான, ஸஹாய குணயோக போக, மோக்ஷ என மாற்றியும் சொல்லலாம்)

மூலமந்திரம்

ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் ஶ்ரீம்
ஓம் ஶ்ரீதுர்காதேவ்யை ஸ்வாஹா ஓம்

## கற்பூர நாயகியே

கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளி மகமாயி! கருமாரி அம்மா!
பொற்கோவில் கொண்ட சிவ காமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வானையம்மா!
விற்கால வேதவல்லி விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே!
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே! (கற்பூர)

புவன முழுதாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் நாகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி!
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமான பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி! (கற்பூர)
உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே! எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!
கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவளின் குரல்கேட்டுன் முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு! (கற்பூர)

கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்!
காலிரண்டும் உன்னடியே நாட வேண்டும்!
பண்ணமைக்கும் நா உனையே பாட வேண்டும்!
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்!
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆக வேண்டும்!
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்!
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளையும் தீருமம்மா! (கற்பூர)

நெற்றியிலே குங்குமமே நிறைய வேண்டும்!
நெஞ்சினுலும் உன் திருநாமம் வழியவேண்டும்!
கற்றதெல்லாம் மேன் மேலும் பெருக வேண்டும்!
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்!
சுற்றமெல்லாம் நீடுழி வாழ வேண்டும்!
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்!
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா! (கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ!
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ!
கன்றுக்கு பசுவின்றி சொந்தமுண்டோ!
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ! (கற்பூர)

அன்புக்கே நானடிமையாக வேண்டும்!
அறிவுக்கே என் காது கேட்க வேண்டும்!
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்!
வஞ்சத்தை என் நெஞ்சம் மறக்க வேண்டும்!
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்!
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்!
என்பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்!
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்! (கற்பூர)

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்தன்னில் சக்தியில்லை!
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!
செம்பவள வாயழகி உன்னெழிலோ!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாலே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை! (கற்பூர)

காற்றாகி கனவாகிக் கடலாகினாய்!
கயிறாகி உயிராகி உடலாகினாய்!
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்!
நிலமாகி பயிராகி உணவாகினாய்!
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்!
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்!
போற்றாத நாளில்லை தாயே உன்னை!
பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை! (கற்பூர

## தாயே கருமாரி எங்கள்

தாயே கருமாரி எங்கள் தாயே கருமாரி
தேவி கருமாரி துணை நீயே மகமாயி (தேவி
ஆயிரம் கண்கள் உடையவளே ஆலயத்தின் தலைமகளே
கடைக்கண்ணாளே பார்த்தருள்வாய் காலமெல்லாம்
காத்தருள்வாய் காத்தருள் புரிவாய்
அன்னை உந்தன் சன்னதியில் அனைவரும் ஒன்றாய்
கூடிடுவோம் கூடிடுவோம்
அம்மா உந்தன் பொன்னடியில் அனுதினமும்
சரணடைவோம் சரணடைவோம்
சிங்கமுக வாகனத்தில் சிங்கார மாரியம்மா
வந்துவரம் தந்திடுவாய் எங்கள் குலதெய்வம் அம்மா (தாயே)

## ஆயிரம் இதழ் கொண்ட

ஆயிரம் இதழ் கொண்ட தாமரைப் பூ எங்கள் தேவி முகம்

அந்த ஆதிசக்தி கருமாரி ஆலயம் வாழ்வு தரும்
மங்கைய ரெல்லாம் போற்றி வணங்கும் மங்கலச் செல்வம்
அதைக் குங்குமத்தாலே அள்ளிக் கொடுக்கும் கலியுக தெய்வம்
(ஆயிரம்)

ஆனி மறைந்து ஆடி பிறந்ததும் கண் மலரும்
கருமாரியம்மனின் அருள் மழையாலே மண்குளிரும்
முன்னை வினைகளை ஓடிடச் செய்யும் அன்னையின் தீர்ப்பு
அவள் முத்துக் கரங்களில் சூட்டி மகிழ்வோம் சந்தனக் காப்பு
(ஆயிரம்)

நதியாய்ப் பாயும் பன்னீராலே அபிஷேகம்
தினம் நாற்பது கோடி நறுமலராலே அலங்காரம்
தங்க ரதத்தில் அம்மன் அமர்ந்து ஊர்கோலம்
அவள் தரிசனம் கண்டு துதிப்பவர்க்கெல்லாம் நலம் சேரும்
(ஆயிரம்)

# மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம்

அயிகிரி நந்தினி நந்தித மேதினி விச்வ வினோதினி நந்தநுதே
கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதிகண்ட குடும்பினி பூரிகுடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

ஸுரவர வர்ஷிணி துர்தர தர்ஷிணி துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர தோஷிணி கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனுஜ நிரோஷிணி திதிஸுத ரோஷிணி துர்மத சோஷிணி ஸிந்துஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி ஜகதம்ப மதம்ப கதம்பவன ப்ரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய ச்ருங்க நிஜாலய மத்யகதே
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி சதகண்ட விகண்டித ருண்ட விதுண்டித சுண்ட கஜாதிபதே
ரிபுகஜ கண்ட விதாரண சண்ட பராக்ரம சுண்ட ம்ருகாதிபதே
நிஜபுஜ தண்ட நிபாதித கண்ட விபாதித முண்ட பதாதிபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயிரண துர்மத சத்ரு வதோதித துர்தர நிர்ஜர சக்தி ப்ருதே
சதுர விசார துரீண மஹாசிவ தூதக்ருத ப்ரமதாதிபதே
துரித துரீஹ துராசய துர்மதி தானவ தூத க்ருதாந்தமதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி சரணாகத வைரிவ தூவர வீர வராபய தாயகரே
த்ரிபுவன மஸ்தக சூலவிரோதி சிரோதி க்ருதாமல சூலகரே
துமிதுமி தாமர துந்துபி நாத மஹோ முகரீக்ருத திங்மகரே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி நிஜஹுங்க்ருதி மாத்ர நிராக்ருத தூம்ர விலோசன தூம்ரசதே
ஸமரவிசோஷித சோணிதபீஜ ஸமுத்பவ சோணித பீஜலதே
சிவசிவ சும்ப நிசும்ப மஹாஹவ தர்ப்பித பூத பிசாசரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

தனுரனு ஸங்க ரணக்ஷண ஸங்க பரிஸ்ஃபுர தங்க நடத்கடகே
கனக பிசங்க ப்ரிஷத்க நிஷங்க ரஸத்பட ச்ருங்க ஹதாபடுகே
க்ருத சதுரங்க பலக்ஷிதிரங்க கடத்பஹுரங்க ரடத்படுகே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

ஜய ஜய ஜப்ய ஜயே ஜய சப்த பரஸ்துதி தத்பர விச்வ நுதே
ஜணஜண ஜிஞ்ஜிமி ஜிங்க்ருத நூபுர ஸிஞ்ஜித மோஹித பூதபதே
நடித நடார்த்த நடீ நட நாயக நாடித நாட்ய ஸுகான ரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி ஸுமன: ஸுமன: ஸுமன: ஸுமன: ஸுமனோஹர காந்தியுதே
ச்ரித ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீகர வக்த்ர வ்ருதே
ஸுநயன விப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமரா திபதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

ஸஹித மஹாஹவ மல்ல மதல்லிக மல்லி தரல்லக மல்லரதே
விரசித வல்லிக பல்லி கமல்லிக ஜில்லிக பில்லிக வர்கவ்ருதே
சிதக்ருத ஃபுல்லஸ முல்லஸி தாருண தல்லஜ பல்லவ ஸல்லலிதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அவிரலகண்ட கலன்மத மேதுர மத்த மதங்கஜ ராஜபதே
த்ரிபுவன பூஷண பூதகலாநிதி ரூப பயோநிதி ராஜஸுதே
அயிஸுத தீஜன லாலஸ மானஸ மோஹன மன்மத ராஜஸுதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

கமல தலாமல கோமல காந்தி கலா கலிதாமல பாலலதே
ஸகல விலாஸ கலாநிலய க்ரம கேலிசலத்கல ஹம்சகுலே
அலிகுல சங்குல குவலய மண்டல மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

கர முரலீரவ வீஜித கூஜித லஜ்ஜித கோகில மஞ்ஜுமதே
மிலித புலிண்ட மனோஹர குஞ்ஜித ரஞ்சித சைல நிகுஞ்ஜகதே
நிஜகுணபூத மஹா சபரீகண ஸத்குண ஸம்ப்ருத கேலிதலே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்தினி ரம்யக பர்தினி சைலஸுதே

கடிதடபீத துகூல விசித்ர மயூக திரஸ்க்ருத சந்த்ரருசே
ப்ரணத ஸுராஸுர மௌலி மணிஸ்ஃபுர தன்சுல ஸன்னக சந்த்ரருசே
ஜிதகனகாசல மௌலி பதோர்ஜித நிர்பர குஞ்ஜர கும்பகுசே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

விஜித ஸஹஸ்ர கரைக ஸஹஸ்ர கரைக ஸஹஸ்ர கரைகநுதே
க்ருத ஸுர தாரக ஸங்கர தாரக ஸங்கர தாரக ஸூனுஸுதே
ஸுரத சமாதி ஸமான ஸமாதி ஸமாதி ஸமாதி ஸுஜாதரதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

பதகமலம் கருணா நிலயே வரிவஸ்யதியோ ஸ்னுதினம் ஸுசிவே
அயி கமலே கமலா நிலயே கமலா நிலய ஸகதம் நபவேத்
தவ பதமேவ பரம்பதமித் யனு சீலயதோ மமகிம் ந சிவே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

கனகல ஸத்கல ஸிந்துஜலைரனு ஸிஞ்சிநுதே குண ரங்கபுவம்
பஜதி ஸகிம் நசசீ குசகும்ப தடீ பரிரம்ப ஸுகானுபவம்
தவ சரணம் சரணம் கரவாணி நதாமரவாணி நிவாஸிசிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

தவ விமலேந்து குலம் வதனேந்துமலம் ஸகலம் நனு கூலயதே
கிமு புரஹூத புரீந்துமுகீ ஸுமுகீபிரஸௌ விமுகீ க்ரியதே
மமது மதம் சிவநாமதனே பவதீ க்ருபயா கிமுத க்ரியதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

அயி மயி தீனதயாலு தயா க்ருபயைவ த்வயா பவித்வயமுமே
அயி ஜகதோ ஜனனீ க்ருபயாஸி யதாஸி ததாஸனு மிதாஸிரதே
யதுசித மத்ர பவத்யுரரீ குருதா துருதா பமபாகுருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே

# அம்பாள் தியானம்

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
க்னம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதகே
சரண்யே த்ரயம்பிகே தேவி நாராயணி நமோஸ்துதே

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர் கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும் கழுபிணியிலாத உடலும்

சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும் தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவி பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே ஆதிகட வூரின் வாழ்வே 2முறை
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி அருள்வாமி! அபிராமியே 2முறை

*அபிராமி அந்தாதி அபிராமி பட்டர்*

[redacted]

[redacted]

## புஷ்பாஞ்சலி

ரோஜாப்பூ கொண்டு வந்தே எங்கள் ராஜேஸ்வரியே பூஜை செய்தால்
தேசாதி தேசம் மெச்சும் ஒரு ராஜாப்போல வாழச் செய்வாள்

முல்லைப்பூ கொண்டு வந்தே எங்கள் மோகனாங்கியை பூஜை செய்தால்
இல்லை என்று சொல்லாமலே அவள் அள்ளி அள்ளி அளித்திடுவாள்

மருக்கொழுந்து கொண்டு வந்தே எங்கள் மனோன் மணியை பூஜை செய்தால்

திருக்கோலம் கொண்டு அங்கே அவள் தினந்தோறும் வந்திடுவாள்

ஜாதிப்பூ கொண்டு வந்தே எங்கள் ஜோதி அவளை பூஜை செய்தால்
ஓதி உணரா வித்தையெல்லாம் தந்து மேதை என்றாக்கி விடுவாள்

மகிழம்பூ கொண்டு வந்தே எங்கள் மாதங்கியை பூஜை செய்தால்
மணமாகாத கன்னியர்க்கு திருமணம் அவள் நடத்தி வைப்பாள்.

தாழம்பூ கொண்டு வந்தே எங்கள் தாட்சாயணியை பூஜை செய்தால்
வாழாப் பெண்ணை நாதனுடன் அவள் சேர்த்து வாழவைப்பாள்

பத்ரம் பல கொண்டு வந்தே எங்கள் பகவதியை பூஜை செய்தால்
சித்திரைப் போல உள்ளவர்க்கு அவள் புத்ர பாக்கியம் செய்திடுவாள்

தாமரைப்பூ கொண்டு வந்தே எங்கள் ஷியாமளியை பூஜை செய்தால்
தாமதம் செய்யாமலே அவள் தாலிப் பிச்சை தந்திடுவாள்

மல்லிகைப்பூ கொண்டு வந்தே எங்கள் மஹேஸ்வரியை பூஜை செய்தால்
பில்லி சூன்யம் ஏவல் எல்லாம் அவள் பின்னாலே ஓடச்செய்வாள்

செண்பகப்பூ கொண்டு வந்தே எங்கள் அம்பிகையை பூஜை செய்தால்
ஜென்மாந்திர பாவமெல்லாம் அவள் தீர்த்து விளக்கி ஓட்டிடுவாள்

பாரிஜாதம் கொண்டு வந்தே எங்கள் பார்வதியை பூஜை செய்தால்
பால ரூபம் கொண்டுமே நம் பாவமெல்லாம் போக்கிடுவாள்

அரளிப்பூ கொண்டு வந்தே எங்கள் அபிராமியை பூஜை செய்தால்
அளவில்லாத செல்வத்தை அவள் அகமகிழ தந்திடுவாள்

செம்பரத்தை கொண்டு வந்தே எங்கள் சண்டிகையை பூஜை செய்தால்
தந்திரமாய் நம் கனவில் வந்து அவள் அந்தரங்கம் சொல்லிடுவாள்

மாதுளம்பூ கொண்டு வந்தே எங்கள் மாதாவை பூஜை செய்தால்
மங்கள வாழ்வு தந்து அவள் மனமகிழச் செய்திடுவாள்

மருதாணிப்பூ கொண்டு வந்தே எங்கள் மீனாட்சியை பூஜை செய்தால்
மாறாத மனத்துடன் பக்தி பாடல்கள் பாடச் செய்வாள்

பத்திரிப்பூ கொண்டு வந்தே எங்கள் திரௌபதியை பூஜை செய்தால்
அருள்கூர்ந்து நம்முள்ளே அவள் அனுக்ரஹம் செய்திடுவாள்

நீலாம்பரம் கொண்டு வந்தே எங்கள் நீலாயதாட்சியை பூஜை செய்தால்
நித்யானந்தம் கொண்டுமே உலகில் நித்யவாசம் செய்திடுவாள்

மனோரஞ்சிதம் கொண்டு வந்தே எங்கள் மாலினியை பூஜை செய்தால்
சுகமான ஸுகந்தமுடன் அவள் அவள் மனம் போல வீசச் செய்வாள்

சம்பங்கிப்பூ கொண்டு வந்தே எங்கள் சர்வேஸ்வரியை பூஜை செய்தால்
சகல சௌபாக்கியம் தந்து அவள் சஞ்சலத்தை நீக்கிடுவாள்

சாமந்திப்பூ கொண்டு வந்தே எங்கள் சங்கரியை பூஜை செய்தால்
சத்தியமாய் வாழ்வினிலே அவள் சந்தோஷத்தை அளித்திடுவாள்

தும்பைப்பூ கொண்டு வந்தே எங்கள் துர்க்கையை பூஜை செய்தால்
தரித்திரத்தை துரத்தி அவள் தனதான்யம் பொழிந்திடுவாள்

மந்தாரப்பூ கொண்டு வந்தே எங்கள் லலிதாம்பிகையே பூஜை செய்தால்
பந்த பாசம் ஆசை நீக்கி அவள் வந்தனங்கள் செய்திடுவாள்

வெட்டி வேர் கொண்டு வந்தே எங்கள் புவனேஸ்வரியை பூஜை செய்தால்
மட்டில்லாத மகிழ்ச்சியுடன் அவள் கட்டாயமாய் கிட்டிடுவாள்

கதிர்ப்பச்சை கொண்டு வந்தே எங்கள் காமாட்சியை பூஜை செய்தால்
கடைக்கண்ணால் கடாட்சிக்க ஜன்மம் கடைத்தேற செய்திடுவாள்

கருமாரி சாம்பல் பெற்றால் கண்ட பிணி ஓடிவிடும்
இடைஞ்சல்கள் மாறி இன்பம் இல்லத்தை நாடிவரும்

# நந்திஸ்வரர் அஷ்டோத்திரம்

ஓம் நந்திகேஷாய நம:
ஓம் ஷிவத்யானபராயணாய நம:
ஓம் வேதபாதாய நம:
ஓம் வ்ருஷபாய நம:
ஓம் தேவதேவாய நம:
ஓம் விராஜமாநாய நம:
ஓம் அக்நிரூபாய நம:
ஓம் சிதசாமரதாரிணே நம:
ஓம் கனகப்ரியாய நம:
ஓம் தேவாய நம:
ஓம் ஷ்ருதிப்ரியாய நம:
ஓம் நாட்யநந்தகாய நம:
ஓம் மத்தஷ்ருங்கிணே நம:
ஓம் ஹேமபூஷணாய நம:
ஓம் ப்ருத்வீரூபிணே நம:
ஓம் ஷிவவாஹநாய நம:
ஓம் சாருஹாஸாய நம:
ஓம் நவத்ருணப்ரியாய நம:
ஓம் மந்த்ரஸாராய நம:
ஓம் கருணாகராய நம:
ஓம் லலாமகலிகாய நம:
ஓம் ஜலாதிபாய நம:
ஓம் வ்ருஷேஷாய நம:
ஓம் சுந்தராய நம:
ஓம் சுவக்ராய நம:
ஓம் சுப்ரகாஷாய நம:
ஓம் ஹம்ஸாய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் ருத்ரரூபாய நம:
ஓம் காமிகப்ரியாய நம:
ஓம் திவ்யரூபய நம:
ஓம் ஜ்வாலநேத்ராய நம:
ஓம் ப்ரஹ்மரூபிணே நம:
ஓம் தீக்ஷ்ணஷ்ருங்காய நம:
ஓம் விரூபாய நம:
ஓம் துங்கஷைலாய நம:
ஓம் ஷிவப்ரியாய நம:
ஓம் நடநாய நம:
ஓம் தனப்ரியாய நம:
ஓம் வேதாங்காய நம:
ஓம் கைலாஸவாசினே நம:
ஓம் ஸ்திதபாதாய நம:
ஓம் ஷ்வேதோபவீதினே நம:
ஓம் கிங்கிணீதராய நம:
ஓம் ஹாடகேஷாய நம:
ஓம் விஷ்ணுரூபிணே நம:
ஓம் நிதீஷாய நம:
ஓம் குலப்ரியாய நம:
ஓம் ஷ்ருங்கிணே நம:
ஓம் வேதஸாராய நம:
ஓம் ப்ரத்யக்ஷாய நம:
ஓம் ஷீக்ராய நம:
ஓம் ஷிவயோகினே நம:
ஓம் சாருரூபாய நம:
ஓம் ஸோமசூர்யாக்நிலோசநாய நம:
ஓம் ஸோமபூஷாய நம:
ஓம் கலிநாஷநாய நம:
ஓம் மஹாவீர்யாய நம:
ஓம் அக்நிமயாய நம:
ஓம் வரதாய நம:
ஓம் மதுராய நம:
ஓம் விஷிஷ்டாய நம:
ஓம் உஜ்ஜ்வாலிநே நம:
ஓம் ஸம்வர்தாய நம:

ஓம் காலாய நம:
ஓம் ஸர்வதேவதாய நம:
ஓம் ஷிவாஸீநாய நம:
ஓம் ஷருங்கபட்டாய நம:
ஓம் தேவராஜாய நம:
ஓம் பண்டிதாய நம:
ஓம் நிரூபாய நம:
ஓம் சிந்நதைத்யாய நம:
ஓம் அனந்தேஷாய நம:
ஓம் வாரநந்திநே நம:
ஓம் விமலாய நம:
ஓம் காலகண்டாய நம:
ஓம் ஷிலாதனஸூநந்தநாய நம:
ஓம் ஷ்ருதிபக்தாய நம:
ஓம் தன்யாய நம:
ஓம் ஷிவஜ்வாலாக்ராஹிணே நம:
ஓம் அநகாய நம:
ஓம் த்ருவாய நம:
ஓம் ஷாஷ்வதாய நம:
ஓம் வ்ருஷாய நம:
ஓம் பீமாய நம:
ஓம் சர்வாத்மநே நம:

ஓம் கேஷாவாய நம:
ஓம் ஷ்வேதவர்ணாய நம:
ஓம் சின்மயாய நம:
ஓம் ஷ்வேதசாமரபூஷாய நம:
ஓம் ப்ரபாநந்திநே நம:
ஓம் பரமேஷ்வராய நம:
ஓம் நிராகாராய நம:
ஓம் நாஸாசூத்ரிணே நம:
ஓம் திலதண்டுலபக்ஷணாய நம:
ஓம் ஸரஸாய நம:
ஓம் பட்டசூத்ராய நம:
ஓம் ஷைலாதிநே நம:
ஓம் காரணாய நம:
ஓம் வீரகண்டாதராய நம:
ஓம் விஷ்ணுநந்திநே நம:
ஓம் பத்ராய நம:
ஓம் வீராய நம:
ஓம் தாத்ரே நம:
ஓம் ப்ரதோஷப்ரியரூபிணே நம:
ஓம் குண்டலத்ருதே நம:
ஓம் ஸிதவர்ணஸ்வரூபிணே நம:
ஓம் சர்வவிக்யாதாய நம:

# சிவ அஷ்டோத்திரம்

ஓம் சிவாய நம:
ஓம் சம்பவே நம:
ஓம் சசிசேகராய நம:
ஓம் விரூபாக்ஷாய நம:
ஓம் நீலலோஹிதாய நம:
ஓம் சூலபாணயே நம:
ஓம் விஷ்ணுவல்லபாய நம:
ஓம் அம்பிகா நாதாய நம:
ஓம் பக்த வத்ஸலாய நம:
ஓம் சர்வாய நம:
ஓம் சிதிகண்டாய நம:
ஓம் உக்ராய நம:
ஓம் காமாரயே நம:
ஓம் கங்காதராய நம:
ஓம் காலகாளாய நம:

ஓம் மஹேச்வராய நம:
ஓம் பினாகிநே நம:
ஓம் வாம தேவாய நம:
ஓம் கபர்திநே நம:
ஓம் சங்கராய நம:
ஓம் கட்வாங்கிநே நம:
ஓம் சிபி விஷ்டாய நம:
ஓம் ஸ்ரீ கண்டாய நம:
ஓம் பவாய நம:
ஓம் திரிலோகேசாய நம:
ஓம் சிவாப்ரியாய நம:
ஓம் கபாலிநே நம:
ஓம் அந்தகாஸுர ஸூதநாய நம:
ஓம் லலாடாக்ஷõய நம:
ஓம் க்ருபாநிதயே நம:

ஓம் பீமாய நம:
ஓம் பரசுஹஸ்தாய நம:
ஓம் ம்ருகபாணயே நம:
ஓம் ஜடாதராய நம:
ஓம் கைலாஸவாஸிநே நம:
ஓம் கவசிநே நம:
ஓம் கடோராய நம:
ஓம் திரிபுராந்தகாய நம:
ஓம் வ்ருஷாங்காய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் பஸ்மோத்தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸாமப்ரியாய நம:
ஓம் ஸ்வரமயாய நம:
ஓம் த்ரயீமூர்த்தயே நம:
ஓம் அநீச்வராய நம:
ஓம் ஸர்வஜ்ஞாய நம:
ஓம் பரமாத்மநே நம:
ஓம் ஸோமஸூர்யாக்நி லோசனாய நம:
ஓம் ஹவிஷே நம:
ஓம் யக்ஞ மயாய நம:
ஓம் ஸோமாய நம:
ஓம் பஞ்வக்த்ராய நம:
ஓம் ஸதாசிவாய நம:
ஓம் விச்வேச்வராய நம:
ஓம் வீரபத்ராய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் ப்ரஜாபதயே நம:
ஓம் ஹிரண்ய ரேதஸே நம:
ஓம் துர்தர்ஷாய நம:
ஓம் கிரீசாய நம:
ஓம் கிரிசாய நம:
ஓம் அநகாய நம:
ஓம் புஜங்கபூஷணாய நம:
ஓம் பர்க்காய நம:
ஓம் கிரிதன்வநே நம:
ஓம் கிரிப்ரியாய நம:
ஓம் க்ருத்தி வாஸஸே நம:
ஓம் புராராதயே நம:
ஓம் மகவதே நம:
ஓம் ப்ரமதாதிபாய நம:
ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:
ஓம் ஸூக்ஷ்மதனவே நம:
ஓம் ஜகத்வ் யாபிநே நம:
ஓம் ஜகத் குரவே நம:
ஓம் வ்யோமகேசாய நம:
ஓம் மஹா ஸேந ஜநகயா நம:
ஓம் சாருவிக்ரமாய நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் பூதபூதயே நம:
ஓம் ஸ்தாணவே நம:
ஓம் அஹிர் புதன்யாய நம:
ஓம் திகம்பராய நம:
ஓம் அஷ்டமூர்த்தயே நம:
ஓம் அநேகாத்மநே நம:
ஓம் ஸாத்விகாய நம:
ஓம் சுத்த விக்ரஹாய நம:
ஓம் சாச்வதாய நம:
ஓம் கண்டபரசவே நம:
ஓம் அஜாய நம:
ஓம் பாசவிமோசகாய நம:
ஓம் ம்ருடாய நம:
ஓம் பசுபதயே நம:
ஓம் தேவாய நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் அவ்யயாயே நம:
ஓம் ஹரயே நம:
ஓம் பூஷதந்தபிதே நம:
ஓம் அவ்யக்ராய நம:
ஓம் பகதேத்ரபிதே நம:
ஓம் தக்ஷாத்வரஹராய நம:

ஓம் ஹராய நம: ஓம் அவ்யக்தாய நம:
ஓம் ஹஸஸ்ராக்ஷாய நம: ஓம் ஸஹஸ்ரபதே நம:
ஓம் அபவர்க்கப்ரதாய நம: ஓம் அனந்தாய நம:
ஓம் தாரகாய நம: ஓம் பரமேச்வராய நம:

----------------

ஓம் நிதனபதயே நம: ஓம் நிதன பதாந்திகாய நம:
ஓம் ஊர்த்வாய நம: ஓம் ஊர்த்தவலிங்காய நம:
ஓம் ஹிரண்யாய நம: ஓம் ஹிரண்யலிங்காய நம:
ஓம் ஸுவர்ணாய நம: ஓம் ஸுவர்ணலிங்காய நம:
ஓம் திவ்யாய நம: ஓம் திவ்யலிங்காய நம:
ஓம் பவ்யாய நம: ஓம் பவலிங்காய நம:
ஓம் சர்வாய நம: ஓம் சர்வலிங்காய நம:
ஓம் சிவாய நம: ஓம் சிவலிங்காய நம:
ஓம் ஜ்வலாய நம: ஓம் ஜ்வலலிங்காய நம:
ஓம் ஆத்மாய நம: ஓம் ஆத்மலிங்காய நம:
ஓம் பரமாய நம: ஓம் பரமலிங்காய நம:

ஓம் பவாய தேவாய நம: - ஓம் பவஸ்ய தேவஸ்ய பத்னியைநம:
ஓம் சர்வாய தேவாய நம: - ஓம் சர்வஸ்ய தேவஸ்ய பத்னியைநம:
ஓம் ஈசானாய தேவாய நம: - ஓம் ஈசானாஸ்ய தேவஸ்ய பத்னியைநம:
ஓம் பசுபதேர் தேவாய நம: - ஓம் பசுபதேர் தேவஸ்ய பத்னியைநம:
ஓம் உக்ராய தேவாய நம: - ஓம் உக்ரஸ்ய தேவஸ்ய பத்னியைநம:
ஓம் ருத்ராய தேவாய நம: - ஓம் ருத்ரஸ்ய தேவஸ்ய பத்னியைநம:
ஓம் பீமாய தேவாய நம: ஓம் பீமஸ்ய தேவஸ்ய பத்னியைநம:
ஓம் மஹதே தேவாய நம: ஓம் மஹதோர் தேவஸ்ய பத்னியைநம:
நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்யவர்ணாய
ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே அம்பிகாபதயே உமாபதயே
பசுபதயே நமோ நம:
நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி பூஜயாமி

திருச்சிற்றம்பலம்

## 108 நந்தீஸ்வரர் போற்றி

ஓம் அன்பின் வடிவே போற்றி
ஓம் அறத்தின் உருவே போற்றி
" அகிலத்தை காப்பாய் " ஓம் அரனுக்குக்காவலனேபோற்றி
" வரியாய் வந்து அமர்ந்தவனே "
" அம்பலக் கூத்தனே " " ஆலயத்தின் முன் இருப்பாய் "

"இருளை ஒழிப்பவனே " "இடபமே "
"இடர்களைத் தடுப்பவனே " "இகபரசுகம் அளிப்பவனே "
"ஈகை உடையவனே " "உலக ரட்சகனே "
"உபதேச காரணனே " "ஊக்க முடையவனே "
"எருதுஉருவம்கொண்டவனே" "எங்களுக்கு வரம் தருவாய் "
"ஏவல்களை ஒழித்தவனே " "ஐயன் பால் அமர்ந்தவனே "
"ஒப்பில்லாதவனே " "ஓங்கார வடிவானவனே "
"ஔடதமாய் இருப்பவனே " "கணநாயகனே "
"கஷ்டங்களைப் போக்குவாய்" "கல்யாண மங்களமே "
"கலைகள் பலதெரிந்தாய் " "கற்பகத் தருநிழல் அமர்ந்தாய் "
"கஸ்தூரிநிற ஒளிஅணிந்தாய்"
"கவலைகளை ஒழிக்கும் வல்லவனே "
"காலனுக்கும் காவலனே " "கிரிவல்லன் துணையே "
"கீர்த்திகள் பல பெற்றாய் " "குணநிதியே "
"குற்றம் களைவாய் " "கூத்தனுக்கு மத்தளம் அடித்தாய் "
"கோலங்கள் பல செய்வாய்" "கைலாச வாகனனே "
"கந்தனைக் கையால் அமர்த்தினாய் "
"காலமெல்லாம் ஈசன் சிந்தனையே "
"பஞ்சாக்ஷர ஜெபம் செய்பவனே "
"பஞ்சலிங்கத்தின் ஒருவனாய் ஆனாய் "
"பரமசிவத்தின் தன்மை தெரிந்தோய் "
"பார்வதிக்கும் வாகனமாய் நின்றாய் "
"பிரதோஷ காலம் உடையவனே "
"பிறவிப் பிணி தீர்ப்பாய் " "பிஞ்சகன் ஏவல் செய்வாய் "
"புகழ்கள் பல பெற்றோய் " "பூதகணங்களுக்குத்தலைவனே "
"பூத பிசாசுகளை அடக்குவாய்" "மகாதேவனே "
"மகிமை பல செய்வாய் " "மஹேஸ்வரன் தூதனே "
"மங்கள நாயகனே " "மாதோன் மத்தம் தடுப்பாய் "
"மஞ்சள்மகிமை கொடுப்பாய்" "மணங்கள் செய்காரணனே "
"மந்திர மகிமை கொடுப்பாய்" "அகிலமெல்லாம் உன் அருள் "
"தக்ஷனுக்கு உபதேசம் செய்தாய் "
"தண்டங்களின் மேல் அமர்ந்தாய் "
"தன்மை களெல்லா அறிந்தோய் "
"தயாபரன் அருள் பெற்றவனே "
"தஞ்ச மென்றவர்க்கருள் செய்வாய் "
"நஞ்சுண்டவனை நாயகனாய் அடைந்தாய் "
"நாக நந்தனின் நயனம் தெரிந்தவனே "
"நாதமும்விந்துவும் ஆனாய்" "பழமும் சுவையும் நீயே "
"பண்புகள் பல செய்வாய் " "பாரெல்லாம் உன் புகழ் "
"பிறவிப் பிணி அறுப்பாய் " "அடியவர்க்கெல்லாம் அன்பே "
"ஆண்டவனிடம் அன்பு கொண்டாய் "

"ஆதாரசக்தி மயம் பெற்றாய்" "சிவனின் வாகனம் ஆனாய் "
"இன்னல் தீர்க்கும் இறைவனே "
"நீண்ட கொம்புடையவனே " "நீலாயாதாஷி அருள் பெற்றாய்"
"நீலகண்டன் முன் நின்றாய்"
"வேதங்களை காலாய் உடையவனே "
"வேள்விக்குத் தலைவனே " "வித்யா காரணனே "
"விவேகம் எனக்குத் தருவாய் "
"விண்ணுலகம் எனக்குத் தருவாய் "
"விண்ணுலகம் செல்லும் வழியே "
"வில்வத்தின் மகிமையே " "விஸ்வே உன் வல்லமையே "
"வேல் உடையவனே " "மகா காளனே "
"மக்கள் பேரு தருவாய் " "மாயைகள் அகற்றுவாய் "
"வெள்ளை நிறம் உடையாய்"92 "உலகம் அறிந்த உத்தமனே "
"உன் மகிமை உலகெல்லாம்"94 "ஊஞ்சல் ஆட்டுபவனே "
"ஊடலுக்கு உதவியவனே " "உபதேசம் பெற்றவனே "
"உலகுக்கு அருள்வாய் " "பிழைகள் பொறுப்பாய் "
"பிள்ளையார் சோதரனே "
"மாயை எடுக்கும் மாடாய் நின்றாய் "
"மாமன்னரும் உன்பணி செய்வார் "
"மகாதேவன் கருணையே " "சிவனாரை சுமப்பவனே "
" கைலையில் நடம்புரிபவனே" "பக்தர் துயர் நீக்கியவனே "
"செவிசாய்த்து அருள்கொடுப்பவனே "
"மகாவிஷ்ணுவே " "பரப்பிரம்ம்மே " "

## 108 லிங்க அர்ச்சனை போற்றி

ஓம் லிங்கமே போற்றி ஓம் அங்க லிங்கமே போற்றி
ஓம் அபய லிங்கமே ” ஓம் அம்ருத லிங்கமே “
ஓம் அபிஷேக லிங்கமே” ஓம் அனாதி லிங்கமே “
ஓம் அகண்ட லிங்கமே “ ஓம் அகூர லிங்கமே “
ஓம் அப்பு லிங்கமே “ ஓம் ஆதி லிங்கமே “
ஓம் ஆதார லிங்கமே “ ஓம் ஆத்ம லிங்கமே “
ஓம் ஆனந்த லிங்கமே “ ஓம் ஆகாச லிங்கமே “
ஓம் ஆலாஸ்யலிங்கமே“ ஓம் ஆதிபந்த லிங்கமே “
ஓம் ஆப்தபாந்தலிங்கமே “ ஓம் ஆரண்ய லிங்கமே “
ஓம் ஈஸ்வர லிங்கமே “ ஓம் உக்ர லிங்கமே “
ஓம் ஊர்த்துவ லிங்கமே “ ஓம் ஏகாந்த லிங்கமே “
ஓம் ஓங்கார லிங்கமே “ ஓம் கனக லிங்கமே “
ஓம் காருண்ய லிங்கமே“ ஓம் காசி லிங்கமே “
ஓம் காஞ்சி லிங்கமே “ ஓம் காளத்தி லிங்கமே “

ஓம் கிரி லிங்கமே “ ஓம் குரு லிங்கமே “
ஓம் கேதார லிங்கமே “ ஓம் கைலாச லிங்கமே “
ஓம் கோடி லிங்கமே “ ஓம் சக்தி லிங்கமே “
ஓம் சங்கர லிங்கமே “ ஓம் சதா லிங்கமே “
ஓம்சச்சிதானந்தலிங்கமே“ ஓம் சகஸ்வர லிங்கமே “
ஓம் சாட்சி லிங்கமே “ ஓம் சாளக்கிராம லிங்கமே “
ஓம் சாந்த லிங்கமே “ ஓம் சிவ லிங்கமே “
ஓம் சித்த லிங்கமே “ ஓம் சிதம்பர லிங்கமே “
ஓம் சீதள லிங்கமே “ ஓம் சுக்ல லிங்கமே “
ஓம் சுயம்பு லிங்கமே “ ஓம் சொர்ண லிங்கமே “
ஓம் சுந்தர லிங்கமே “ ஓம் ஸ்துல லிங்கமே “
ஓம் சூட்சும லிங்கமே “ ஓம் ஸ்படிக லிங்கமே “
ஓம் ஸ்திர லிங்கமே “ ஓம் சைதன்ய லிங்கமே “
ஓம் ஜெய லிங்கமே “ ஓம் ஜம்பு லிங்கமே “
ஓம் ஜீவ லிங்கமே “ ஓம் ஜோதி லிங்கமே “
ஓம் ஞான லிங்கமே “ ஓம் தர்ம லிங்கமே “
ஓம் தானு லிங்கமே “ ஓம் தேவ லிங்கமே “
ஓம் நடன லிங்கமே “ ஓம் நாக லிங்கமே “
ஓம் நித்திய லிங்கமே “ ஓம் நிர்மல லிங்கமே “
ஓம் பர லிங்கமே “ ஓம் பஞ்ச லிங்கமே “
ஓம் பஞ்சாட்சரலிங்கமே“ ஓம் பத்திரி லிங்கமே “
ஓம் பக்த லிங்கமே “ ஓம் பாபநாச லிங்கமே “
ஓம் பிரதோஷ லிங்கமே“ ஓம் பிராண லிங்கமே “
ஓம் பீஜ லிங்கமே “ ஓம் பிரம்ம லிங்கமே “
ஓம்பிரம்மாண்டலிங்கமே“ ஓம் பிரசாத லிங்கமே “
ஓம் புவன லிங்கமே “ ஓம் பூத லிங்கமே “
ஓம் புராண லிங்கமே “ ஓம் பூரண லிங்கமே “
ஓம் பூஜ்ய லிங்கமே “ ஓம் மரகத லிங்கமே “
ஓம் மஹா லிங்கமே “ ஓம் மகேஸ்வர லிங்கமே “
ஓம் மார்க்கபந்துலிங்கமே“ ஓம் மார்கண்டேயலிங்கமே“
ஓம் மிருத்திஞ்சலிங்கமே“ ஓம் முக்தி லிங்கமே “
ஓம்மும்மூர்த்தியானலிங்கமே“ ஓம் மூலலிங்கமே“
ஓம் மேரு லிங்கமே “ ஓம் மோண லிங்கமே “
ஓம் மோட்ச லிங்கமே “ ஓம் யக்ஞ் லிங்கமே “
ஓம் ராம லிங்கமே “ ஓம் ராஜ லிங்கமே “
ஓம் ருத்ர லிங்கமே “ ஓம் வாயு லிங்கமே“
ஓம் விஸ்வ லிங்கமே “ ஓம் விசித்ர லிங்கமே “
ஓம் வேத லிங்கமே “ ஓம் வைத்திய லிங்கமே “
ஓம் இருதய லிங்கமே“ ஓம் சைல லிங்கமே “
ஓம் அக்னி லிங்கமே “ ஓம் லிங்கோற்பவனே “ “

# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்'

திருப்பெருந்துறையில் அருளியது தற்சிறப்புப் பாயிரம்)

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய்,விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்

பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்

நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே

தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.
திருச்சிற்றம்பலம்

# சிவ வாக்கியம்

சித்தர் பாடல்கள்: சிவவாக்கியம்

## காப்பு

அரியதோர் நமச்சிவாயம் ஆதியந்தம் ஆனதும்
ஆறிரண்டு நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்
சுரியதோர் எழுத்தைஉன்னிச் சொல்லுவேன் சிவவாக்கியம்
தோஷதோஷ பாவமாயை தூரதூர ஓடவே. 0
கரியதோர் முகத்தையொத்த கற்பகத்தைக் கைதொழக்
கலைகள்நூல்கள் ஞானமும் கருத்தில் வந்துதிக்கவே
பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்த பேரெலாம்
பேயனாகி ஓதிடும் பிழைபொறுக்க வேண்டுமே. 1

## சரியை விலக்கல்

ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே. 3
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## ஞான நிலை

என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்தது இல்லையே
என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்தஒன்றை யாவர்காண வல்லரோ?
என்னிலே இருந்திருந்து யான்உணர்ந்து கொண்டனே. 6
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## இதுவுமது

நானதேது? நீயதேது? நடுவில்நின்றது ஏதடா?
கோனதேது? குருவதேது? கூறிடும் குலாமரே!
ஆனதேது? அழிவதேது? அப்புறத்தில் அப்புரம்
ஈனதேது? ராமராம ராமஎன்ற நாமமே! 12
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## யோக நிலை

அஞ்செழுத்தி லேபிறந்து அவ்வஞ்செழுத்தி லேவளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்.
அஞ்செழுத்தில் ஓர்எழுத்து அறிந்துகூற வல்லீரேல்!
அஞ்சல்அஞ்சல் என்றுநாதன் அம்பலத்தில் ஆடுமே! 20
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## விராட்சொரூபம்

இடத்ததுன்கண் சந்திரன், வலத்ததுன்கண் சூரியன்
இடக்கைசங்கு சக்கரம், வலக்கைசூலம் மான்மழு;
எடுத்தபாதம் நீள்முடி, எண்திசைக்கும் அப்புறம்,
உடல்கலந்து நின்றமாயம் யாவர்காண வல்லரே? 53
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## தெய்வசொரூபம்

உருவும்அல்ல ஒளியும் அல்ல ஒன்றதாகி நின்றதே
மருவும்அல்ல கந்தம்அல்ல மந்தநாடி உற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசும்ஆவி தானும்அல்ல
அரியதாக நின்றநேர்மை யாவர்காண வல்லிரே. 187
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## தேகநிலை

மண்கலம் கவிழ்ந்தபோது வைத்துவைத்து அடுக்குவார்
வெங்கலம் கவிழ்ந்தபோது வேணும்என்று பேணுவார்;
நம்கலம் கவிழ்ந்தபோது நாறும்என்று போடுவார்
எண்கலந்து நின்றமாயம் என்னமாயம் ஈசனே. 79
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## அக்ஷர நிலை

ஆனஅஞ் செழுத்துளே அண்டமும் அகண்டமும்

ஆனஅஞ் செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனஅஞ் செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனஅஞ் செழுத்துளே அடங்கலாவ லுற்றதே. 2
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## இதுவுமது

நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை,
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாயை மாயையோ?
அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்
எனக்குள்நீ உனக்குள்நான் இருக்குமாற தெங்ஙனே. 7
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## ஞானநிலை

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை?
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை?
மிண்டனாய்த் திரிந்தபோது இறைத்தநீர்கள் எத்தனை?
மீளவும் சிவாலயங்கள் சூழவந்தது எத்தனை? 26
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## ஞானம்

அம்பலத்தை அம்புகொண்டு அசங்கென்றால் சங்குமோ?
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றால் கலங்குமோ?
இன்பமற்ற யோகியை இருளும்வந்து அணுகுமோ?
செம்பொன் அம்பலத்துளே தெளிந்த சிவாயமே. 43
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## பிரணவம்

மூன்றுமண்ட லத்திலும் முட்டிநின்ற தூணிலும்
நான்றபாம்பின் வாயிலும் நவின்றெழுந்த அட்சரம்;
ஈன்றதாயும் அப்பனும் எடுத்துரைத்த மந்திரம்;
தோன்றும்ஓர் எழுத்துளே சொல்லஎங்கும் இல்லையே! 99
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## பஞ்சாட்சர மகிமை

நமசிவாய அஞ்செழுத்தும் நல்குமேல் நிலைகளும்
நமசிவாய அஞ்சில்அஞ்சும் புராணமான மாயையும்
நமசிவாய அஞ்செழுத்து நம்முளே இருக்கவே!

நமசிவாய உண்மையை நன்குஉரைசெய் நாதனே! 104
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## கடவுளின் உண்மை கூறல்

இல்லைஇல்லை என்றுநீர் இயம்புகின்ற ஏழைகாள்,
இல்லைஎன்று நின்றதொன்றை இல்லை என்னலாகுமோ?
இல்லைஅல்ல ஒன்றுமல்ல இரண்டும்ஒன்றி நின்றதை
எல்லைகண்டு கொண்டபேர் இனிப்பிறப்பது இல்லையே. 116
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## இராம நாம மகிமை

காரகார காரகார காவல்ஊழி காவலன்
போரபோர போரபோர போரில்நின்ற புண்ணியன்
மாரமார மாரமார மரங்கள்ஏழும் எய்தசீ
ராமராம ராமராம ராமஎன்னும் நாமமே. 117
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## அத்துவிதம்

விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப்பொருள்
கண்ணிலாணி யாகவே கலந்துநின்ற தெம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரும் எம்முளே அமர்ந்துவாழ்வ துண்மையே. 121
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## அம்பலம்

அகாரமானது அம்பலம் அனாதியானது அம்பலம்
உகாரமானது அம்பலம் உண்மையானது அம்பலம்
மகாரமானது அம்பலம் வடிவானது அம்பலம்
சிகாரமானது அம்பலம் தெளிந்ததே சிவாயமே. 406
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## பஞ்சாட்சரம்

உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்
தண்மையான மந்திரம் சமைந்துரூபம் ஆகியே
வெண்மையான மந்திரம் விளைந்துநீற தானேதே
உண்மையான மந்திரம் அதொன்றுமே சிவாயமே. 486
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

## பஞ்சாட்சர மகிமை

ஓம்நமசி வாயமே உணர்ந்துமெய் உணர்ந்தபின்
ஓம்நமசி வாயமே உணர்ந்துமெய் தெளிந்தபின்
ஓம்நமசி வாயமே உணர்ந்துமெய் உணர்ந்தபின்
ஓம்நமசி வாயமே உட்கலந்து நிற்குமே! 109
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய
திருச்சிற்றம்பலம்.

# திருக்கைலாயப் போற்றித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

இமையா துயிரா திருந்தாய் போற்றி

என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

நெடிய விசும்போடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் றன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

# திருத்தொண்டர் தொகை

## சுந்தரர் அருளியது

### பாடல் 1:

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (6): திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், இளையான்குடிமாற நாயனார், மெய்ப்பொருள் நாயனார், விறன்மிண்ட நாயனார், அமர்நீதி நாயனார்.

இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ள தொகை அடியார்கள் (1): தில்லைவாழ் அந்தணர்.

### பாடல் 2:

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற்கு அடியேன்
கடவூரிற் கலயன் தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (7): ஏறிபத்த நாயனார், ஏனாதி நாயனார், கண்ணப்ப நாயனார், குங்கிலியக் கலய நாயனார், மானக்கஞ்சாற நாயனார், அரிவாட்டாய நாயனார், ஆனாய நாயனார்.

### பாடல் 3:

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (6): மூர்த்தி நாயனார், முருக நாயனார், உருத்திர பசுபதி நாயனார், திருநாளைப் போவார் (நந்தனார்), திருகுறிப்புத் தொண்ட நாயனார், சண்டேசுவர நாயனார்.

பாடல் 4:

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கு அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (7): திருநாவுக்கரசர், குலச்சிறை நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், பேயார் (காரைக்கால் அம்மையார்), அப்பூதி நாயனார், திருநீலநக்க நாயனார், நமிநந்தியடிகள்.

பாடல் 5:

வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (6): திருஞானசம்பந்தர், ஏயர்கோன் கலிக்காம நாயனார், திருமூலர், தண்டியடிகள், மூர்க்க நாயனார், சோமாசி மாற நாயனார்.

பாடல் 6:

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டற்கு அடியேன்
கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (6): சாக்கிய நாயனார், சிறப்புலி நாயனார், சிறுதொண்ட நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் (கழிறிற்றிவார்), கணநாத நாயனார், கூற்றுவ நாயனார்.

பாடல் 7:

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற்கு அடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (7): புகழ்ச்சோழ நாயனார், நரசிங்க முனையரைய நாயனார், அதிபத்த நாயனார், கலிக்கம்ப நாயனார், கலிய நாயனார், சத்தி நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள தொகை அடியார்கள் (1): பொய்யடிமை இல்லாத புலவர்கள்.

பாடல் 8:

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (5): கனம்புல்ல நாயனார், காரி நாயனார், நின்றசீர் நெடுமாற நாயனார், வாயிலார் நாயனார், முனையிடுவார் நாயனார்.

பாடல் 9:

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (5): கழற்சிங்க நாயனார், இடங்கழி நாயனார், செருத்துணை நாயனார், புகழ்த்துணை நாயனார், கோட்புலி நாயனார்.

பாடல் 10:

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

இப்பாடலில் நாயன்மார்கள் எவரும் குறிப்பிடப் படவில்லை.

இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ள தொகை அடியார்கள் (7): பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார்.

பாடல் 11:

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணாற்கு அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே.

இப்பாடலில் குறிக்கப் பட்டுள்ள நாயன்மார்கள் (5): பூசலார் நாயனார், மங்கையர்க்கரசியார் (மானி என்பது இயற்பெயர்), நேச நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்.
இறுதிப் பாடலான இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ள மேலும் (3) நாயன்மார்கள்: அடியவர்களான சுந்தரரின் தந்தை சடையனார், தாயார் இசைஞானியார், மற்றும் இத்திருப்பதிகத்தை பாடியருளிய சுந்தர மூர்த்தி நாயனார்.

## அரஹர சிவனே ஆடுகவே

ஆடுக நடனம் ஆடுகவே அரஹர சிவனே ஆடுகவே
ஆடுக நடனம் ஆடுகவே அரஹர சிவனே ஆடுகவே (ஆடுக)

சிவகை லாசா பரமேசா திரிபுரம் எறிந்த நடராஜா

பவபயம் போக்கும் பரமேசா பனிமலை ஆளும் சர்வேசா (ஆடுக)

அறுகொடு தும்பை மலராட அணிமணி மாலைகள் தானாட
பெருகிடும் கங்கை தலையாட பிறைமதி யதுவும் உடனாட (ஆடுக)

சூலம் உடுக்கை உடனாட சூழும் கணங்கள் உடனாட
ஆலம் குடித்தோன் ஆடுகவே அடியார் மகிழ ஆடுகவே (ஆடுக)

ஆலவா யரசே சொக்கேச அவனியை காக்கும் பரமேசா
ஆலங்காட்டில் ஆடிடுவாய் அரஹரசிவனே ஆடுகவே (ஆடுக)

திருக்கடவூரின் கடை ஈசா தில்லையம் பதியில் நடராஜா
திருமுல்லை மாசிலா மனியீசா திருநடம் ஆடுகஆடுகவே (ஆடுக)

மயிலை கபாலி ஈஸ்வரனே, மதுரையில் ஆடிய ஆட்டமென்ன
கயிலையில் ஆடிய ஆட்டமென்ன கால்மாறி ஆடிய நடராஜா(ஆடுக)

வீரை மரத்தின் வித்தகனே வேட்டுவன் காத்த உத்தமனே
சீராய் சாக்கை எழுந்தோனே சிவனார் நடனம் ஆடுகவே (ஆடுக)

நந்தி மத்தளம் கொட்டிடவும் நாரதர் கானம் இசைத்திடவும்
தொந்தி கணபதி இசைக்கூட்ட சுந்தரேசா ஆடுகவே (ஆடுக)

திரிபுரம் எரித்த விரிசடையோன் திங்களைச் சூடும்முடியுடையோன்
நரியை பரியாய்ச் செய்தவனே நமசிவாய ஆடுகவே (ஆடுக)

புள்ளூர் வாழும் பெருமானே புலியின் தோலை அணிந்தவனே
வள்ளல் முருகைத் தந்தவனே வைத்தியநாதா ஆடுகவே (ஆடுக)

தில்லையில் ஆடும் நடராஜா சிவகாமியை ஆளும் மகராஜா
அல்லல் வினையை அறுப்பவனே பொன் அம்பலத்தரசே ஆடுகவே (ஆடுக)

ஆடல் பாடல் கூடலிலே அழகாம் வெள்ளி அம்பலத்தில்
தேடர்கரியப் பெருமானே சிந்தை மகிழ ஆடுகவே (ஆடுக)

நலமும் வளமும் பலமாக நாளும் வளரும் நெல்லையிலே
உளமார் தாமிர மன்றத்திலே உத்தமச் செல்வா ஆடுகவே (ஆடுக)

## நமச்சிவாயா

நமச்சிவாயா நமச்சிவாயா ஓம் நமச்சிவாயா
நமச்சிவாயா நமச்சிவாயா ஓம் நமச்சிவாயா
நமச்சிவாயா நமச்சிவாயா ஓம் நமச்சிவாயா
நமச்சிவாயா நமச்சிவாயா ஓம் நமச்சிவாயா

ஹர ஹர சிவனே அருணாசலனே அண்ணாமலையே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா

சிவ சிவ ஹரனே சோனாச்சலனே ஹர ஹர சிவனே
அருணாசலனே அண்ணாமலையே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

அணலே நமச்சிவாயம் அழகே நமச்சிவாயம்
கனலே நமச்சிவாயம் காற்றே நமச்சிவாயம்

புலியின் தோலை இடையில் அணிந்த புனிதக்கடலே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
கலியின் தீமை யாவும் நீக்கும் கருணை கடலேப் போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா ஹர ஓம் நமச்சிவாயா

புனலே நமச்சிவாயம் பொருளே நமச்சிவாயம்
புகழே நமச்சிவாயம் புனிதம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

சிவனார் கங்கை கரையில் அமர்ந்த சீதள ஒளியே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
தவமே செய்யும் தபோவனத்தில் ஜோதி லிங்கனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

வேதம் நமச்சிவாயம் நாதம் நமச்சிவாயம்
பூதம் நமச்சிவாயம் குரோதம் நமச்சிவாயம்

மணிப்பூர் அகமாய் சூட்சுமம் காட்டும் அருணாச்சாலனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
மங்கள சிவனாய் தங்கிடும் வடிவே செங்கனல வண்ணா போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

அன்பே நமச்சிவாயம் அணியே நமச்சிவாயம்
பண்பே நமச்சிவாயம் பரிவே நமச்சிவாயம் (நமச்சிவாய......)

நினைத்த உடனே முக்தியை தந்திடும் அண்ணாமலையே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
நிம்மதி வாழ்வில் நித்தமும் தந்திட சன்னிதி கொண்டாய் போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

அருளே நமச்சிவாயம் அழகே நமச்சிவாயம்
இருளே நமச்சிவாயம் இனிமை நமச்சிவாயம்

சித்தர் பூமியாய் சிவலயம் காட்டும் அண்ணாமலையே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
பக்தர் நெஞ்சினை சிவமயாமாக்கும் சிவபெருமானே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

குருவே நமச்சிவாயம் உயிரே நமச்சிவாயம்
அருவே நமச்சிவாயம் அகிலம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

அன்னை உமைக்கு இடமாய் உடலில் ஆலயம் தந்தாய் போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
சொன்ன வண்ணமே செய்யும் நாதனே சோனாசலனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

ஆதியும் நமச்சிவாயம் அந்தமும் நமச்சிவாயம்
ஜோதியும் நமச்சிவாயம் சுந்தரம் நமச்சிவாயம்

சூரியன் சந்திரன் அஷ்டவ சுட்கன் ஒதி நாடும் நாதா போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
சுந்தரி உண்ணாமலையுடன் திகழும் அண்ணாமலையே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

சம்பவம் நமச்சிவாயம் சத்குரு நமச்சிவாயம்
அம்பிகை நமச்சிவாயம் ஆகமம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

எட்டா நிலையில் நெட்டாய் எழுந்த வேதலிங்கமே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
பற்றாய் இருந்து பற்றும் எவருக்கும் பாதை காட்டுவாய் போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

கதிரும் நமச்சிவாயம் சுடரும் நமச்சிவாயம்
புதிரும் நமச்சிவாயம் புவனம் நமச்சிவாயம்

ஜோதி பிழம்பின் சுடரில் கனிந்த அண்ணாமலையே போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
ஆதி பிழம்பில் ஆலயம் கொண்ட அடி அண்ணாமலை போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

குளிரே நமச்சிவாயம் முகிலும் நமச்சிவாயம்
பனியும் நமச்சிவாயம் பருவம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

குமரகுருவான குகனே பனிந்த குருலிங்கேசா போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
இமய மலைமீது வாசம் புரியும் அமரோர் அரசே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

மண்ணும் நமச்சிவாயம் மரமும் நமச்சிவாயம்
விண்ணும் நமச்சிவாயம் விளைவும் நமச்சிவாயம்

மணிமலையாகிய மந்திர மலையில் சுந்தரமானாய் போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
அணியா பரணம் பலவகை சூடும் அருணாச்சலனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

மலையே நமச்சிவாயம் மலரே நமச்சிவாயம்
சிலையே நமச்சிவாயம் சிகரம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

குமரகுருவான குகனே பனிந்த குருலிங்கேசா போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
இமய மலைமீது வாசம் புரியும் அமரோர் அரசே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

மண்ணும் நமச்சிவாயம் மரமும் நமச்சிவாயம்
விண்ணும் நமச்சிவாயம் விளைவும் நமச்சிவாயம்

மணிமலையாகிய மந்திர மலையில் சுந்தரமானாய் போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
அணியா பரணம் பலவகை சூடும் அருணாச்சலனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

மலையே நமச்சிவாயம் மலரே நமச்சிவாயம்
சிலையே நமச்சிவாயம் சிகரம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

கம்பதிலையான் குகனை கண்ணில் படைத்த சிவனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
நம்பிய நெஞ்சில் நலமே அளிக்கும் நாகா பரணா போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

திருவே நமச்சிவாயம் தெளிவே நமச்சிவாயம்
கருவே நமச்சிவாயம் கனிவே நமச்சிவாயம்

அருணை நகர சிகரம் விரிந்த அக்னிலிங்கனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
கருணை வேண்டி காலடி பணிந்து சரணம் செய்தோம் போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

பெண்ணும் நமச்சிவாயம் ஆணும் நமச்சிவாயம்
என்னம் நமச்சிவாயம் ஏகம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

மூன்று மூர்த்திகளின் வடிவாய் எழுந்த முக்கண் அரசே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
தோன்றி வளர்ந்து துலங்கிடும் கதிரே சூல நாதனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

ஒலியே நமச்சிவாயம் உணர்வே நமச்சிவாயம்
வெளியே நமச்சிவாயம் விசையே நமச்சிவாயம்

மோன வடிவாகி மோஹனம் காட்டும் மூர்த்திலிங்கனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
ஞானம் வழங்கி நர்கதி அளீக்கும் நந்தி வாகனா போற்றி

ஹர ஓம் நமச்சிவாயா

நாகம் நமச்சிவாயம் ரகசியம் நமச்சிவாயம்
யோகம் நமச்சிவாயம் யாகம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

அர்த்தநாரியாய் வித்தகம் செய்யும் அருணாச்சலனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
நர்த்தன தாண்டவ நாடகம் ஆடும் ராக நாதனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

அதிர்வும் நமச்சிவாயம் அசைவும் நமச்சிவாயம்
நிலையும் நமச்சிவாயம் நிறைவும் நமச்சிவாயம்

ரமண முனிக்கு ரகசியம் சொன்ன ராஜலிங்கனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
இமையோர் தலைவன் பதவியும் வழங்கும் ஈசமகேஷா போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

கோடை நமச்சிவாயம் கொண்டலும் நமச்சிவாயம்
வாடையும் நமச்சிவாயம் தென்றலும் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

பரணி தீபமாய தரணியில் ஒளிரும் பரமேஷ்வரனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
ஹரஹர என்றால் வரமழை பொழியும் ஆதிலிங்கனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

சித்தியும் நமச்சிவாயம் முக்தியும் நமச்சிவாயம்
பக்தியும் நமச்சிவாயம் சக்தியும் நமச்சிவாயம்

கார்த்திகை திருநாள் உற்சவம் காணும் தீபச்சுடரே போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
தீர்த்தம் யாவிலும் நீராடிடுவாய் அருணாச்சலனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

நிலவே நமச்சிவாயம் நிஜமே நமச்சிவாயம்
கலையே நமச்சிவாயம் நினைவே நமச்சிவாயம் (நமச்சிவாய......)

சுற்றிட சுற்றிட வெற்றிகள் வழங்கும் சோனாலச்சனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
பொற்ச்சபைதன்னில் அற்புத நடனம் புரியும் பரமே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

லிங்கம் நமச்சிவாயம் லீலை நமச்சிவாயம்
கங்கை நமச்சிவாயம் கருணை நமச்சிவாயம்

சோனை நதி தீரம் கோயில் கொண்ட அருணாசலனே போற்றி

சிவ ஓம் நமச்சிவாய
வானவெளிதனை கோபுரம் ஆக்கி மலையில் நிறைந்தாய் போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

செல்வம் நமச்சிவாயம் சீரும் நமச்சிவாயம்
வில்வம் நமச்சிவாயம் வேஷம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

ஆதிரை அழகா ஆவுடை மேலே அமரும் தலைவா போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
வேதியர் போற்றும் வென்சடை இறைவா வேதப்பொருளே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

முதலும் நமச்சிவாயம் முடிவும் நமச்சிவாயம்
இடையும் நமச்சிவாயம் விடையும் நமச்சிவாயம்

நாகமுடியுடன் யோகம் புரியும் நாகேஸ்வரனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
வேத நடுவிலே திருநீர் அணியும் அருனேஷ்வரனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

அம்மையும் நமச்சிவாயம் அப்பனும் நமச்சிவாயம்
நண்மையும் நமச்சிவாயம் நாதனும் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

அடிமுடி இல்லா ஆனந்த வடிவே அண்ணாமலையே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
அம்மையப்பனாய் அகிலம் காக்கும் அமுதேஷ்வரனே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

அதுவும் நமச்சிவாயம் இதுவும் நமச்சிவாயம்
எதுவும் நமச்சிவாயம் எதிலும் நமச்சிவாயம்

விடையாம் காளை வாகனம் ஏறி விண்ணில் வருவாய் போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
வேண்டிய கணமே என்னிய கணமே கண்ணில் தெரிவாய் போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

சூலம் நமச்சிவாயம் சுகமே நமச்சிவாயம்
நீலம் நமச்சிவாயம் நித்தியம் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

பௌர்னமி நாளீல் பிறைநிலவணியும் மகாதேவனே போற்றி
சிவ ஓம் நமச்சிவாயா
ஔஹவ்சகமாலாய் பிணிகள் தீர்க்கும் அருணச்சலமே போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

தீபம் நமச்சிவாயம் திருவருள் நமச்சிவாயம்
ரூபம் நமச்சிவாயம் ருத்ரம் நமச்சிவாயம்

பனிகைலாயம் தீ வடிவாகிய அண்ணாமலையே போற்றி
சிவ ஓம் நமச்சிவாய
பனிவடிவாகிய தென்னாடுடையாய் திருவருளேசா போற்றி
ஹர ஓம் நமச்சிவாயா

எங்கும் நமச்சிவாயம் எல்லாம் நமச்சிவாயம்
எழிலும் நமச்சிவாயம் என்றும் நமச்சிவாயம் (நமச்சிவாய......)

## குரு பாடல்

விழி கிடைக்குமா ? அபய கரம் கிடைக்குமா ?
குருநாதர் சரணத்தில் நிழல் கிடைக்குமா ? ....விழி...

அலைமீது அலையாக துயர் வந்து சேரும் போது
அஞ்சாதே என அபயக்குரல் கேட்குமா ? ...விழி..

நங்கூரம் போல் குருநாதர் கடைவிழி இருக்க
சம்சாரத் துயர் கண்டு மனம் அஞ்சுமா?

நிலையாக அன்பு வைத்து எனதெல்லாம் உனதடியில் வைத்தால்
விழியோரப் படகில் எனக்கிடம் கிடைக்குமா ? ...விழி..

கோடி கோடி ஜன்மம் நான் எடுப்பேன்,
குரு உந்தன் அருள் இருந்தால்
குணக்குன்றே உனக்காக எனை ஆக்குவேன்

நினைக்காத இன்பம் பல எனைவந்து சேரும்போது
நினைத்தாலே அபயம் தரும் கரம் கிடைக்குமா ?

## திருஎவ்வுளூர் வீரராகவன் போற்றிப் பஞ்சகம்

### வைத்திய வீரராகவப் பெருமாள் துதி

திருவள்ளூரில் எம்பிரான் வைத்தியவீரராகவப் பெருமாள் என்ற திருநாமத்துடனேயே எழுந்தருளி இருக்கிறார். வைத்திய வீரராகவரை தரிசிப்பது எல்லா பிணிகளையும் தீர்க்கும் என்பது அனுபவ பூர்வமான உண்மை. ராமலிங்க வள்ளலார், தீராத வயிற்று நோயால் வாடியபோது, இங்கேவந்து எம்பெருமானை தரிசித்தே தமது நோய் நீங்கப்பெற்றார். அப்போது அவர் பாடிய இந்தத் துதியைச் சொல்வதால், எத்தகைய பிணியும் தீரும். குறிப்பாக வெப்பநோய்களும், வயிற்று உபாதைகளும் விலகி ஓடி, உடல்நலம் சீராகும் என்பது நிச்சயம்

தண்ணமர் மதியே சாந்தந் தழைத்தசத்துவனே போற்றி
வண்ணமா மணியே போற்றிமணிவண்ணத் தேவா போற்றி
அண்ணலே எவ்வுள்ளூரில் அமர்ந்தருள்ஆதி போற்றி
விண்ணவர் முதல்வா போற்றி வீரராகவனே போற்றி
பாண்டவர் தூதனாகப் பலித்தருள் பரனேபோற்றி
நீண்டவனேன்ன வேதம் நிகழ்த்தும்மாநிதியே போற்றி
தூண்டலில்லாமல் ஓங்கும் ஜோதிநல்விளக்கே போற்றி
வேண்டவர் எவ்வுள்ளூவர்வாழ் வீர ராகவனேபோற்றி
மேதினி புரக்கும் வேந்தர் வீறெலாம்நினதே போற்றி
கோதிலா மனத்தே நின்று குலாவியகோவே போற்றி
ஓதிய எவ்வுள்ளூரில் உறைந்தருள்புரிவாய் போற்றி
வேதியன் தன்னை ஈன்ற வீர ராகவனேபோற்றி!
இளங்கொடி தனைக்கொண்டேகும்இராவணன்
தனையழித்தேகளங்கமில் விபீடணர்க்குக்கனவரசளித்தாய் போற்றி
துளங்குமா தவத்தோர் உற்ற துயரெலாம்தவிர்த்தாய் போற்றி
விளங்குநல் எவ்வுள்ளூர்வாழ் வீரராகவனே போற்றி
அற்புதத் திருவை மார்பில் அணைத்தபேரழகா போற்றி!
பொற்புறு திகிரி சங்கு பொருந்துகைப்புனிதா போற்றி!
வற்புறு பிணிதீர்த்து என்னை மகிழ்வித்தவரதா போற்றி
வெற்புயர் எவ்வுள்ளூர்வாழ் வீர ராகவனேபோற்றி

## சின்ன கண்ணா நீ வா!

சின்ன சின்ன பதம் வைத்து கண்ணா நீ வா வா வா
மணிவண்ணா நீ வா வா வா
வண்ண வண்ண உடை உடுத்தி கண்ணா நீ வா வா வா
மணிவண்ணா நீ வா வா வா...(சின்ன)

மல்லிகை முல்லை மலராலே அர்சணை செய்வோம் நீ வா வா வா
மாதவனே ஆதவனே யாதவனே நீ வா வா வா...(சின்ன)

திரௌபதி மானம் காத்தவனே தீனஸரண்யா நீ வா வா வா
காலமெல்லம் உன் அருளை வேண்டுகிறொம் நீ வா வா வா (சின்ன)

கண்ணில் தெரியும் காட்சியெல்லம் கமலக்கண்ணா உன்தொற்றம்
கண்ணழகா மணிவண்ணா கண்ணா நீ வா வா வா...(சின்ன)

# கோபாலா கோபாலா!

கோபாலா கோபாலா கோகுல நந்தன கோபாலா!
நந்த முகுந்தா கோபாலா நவநீத சோரா கோபாலா!

வேணு விலோலா கோபாலா விஜய கோபாலா கோபாலா!
ராதா கிருஷ்ணா கோபாலா ரமணீய வேஷா கோபாலா!

காளிய மர்த்தன கோபாலா கௌஸ்துப பூஷண கோபாலா!
முரளீ லோலா கோபாலா முகுந்தப் பிரியா கோபாலா!

ராதா ரமணா கோபாலா ராஜீவ நேத்ரா கோபாலா!
யசோதா பாலா கோபாலா யதுகுல திலகா கோபாலா!

நளின விலோசன கோபாலா கோமள வசனா கோபாலா!
புராண புருஷா கோபாலா புண்ய ஸ்லோகா கோபாலா!

கனகாம் பரதா கோபாலா கருணா மூர்த்தே கோபாலா!
கஞ்ச விலோசன கோபாலா கஸ்தூரி திலகா கோபாலா !

# சலங்கை கட்டி ஓடி ஓடி வா கண்ணா!

சலங்கை கட்டி ஓடி ஓடி வாயோ – எந்தன்
தாமரைக் கண்ணா ஆடி ஓடி வாயோ – உன்
பிஞ்ஜு பாதம் தேடிதேடி நாங்கள் – இங்கே
திவ்யநாமம் பாடிபாடி வந்தோம்(சலங்கை)
தேவகி நந்தன ராதா ஜிவனா கேசவா ஹரே மாதவா
பூதன பஞ்ஜன பாபவிநாதன கேசவா ஹரே மாதவா
கோகுல பாலனே ஓடிவாயோ கோகுல பாலனே ஆடிவாயோ
(சலங்கை)
பாண்டவரகஷக பாபவிநாசன கேசவா ஹரே மாதவா
அர்ஜீனரகஷக அக்ஞான நாசனா கேசவா ஹரே மாதவா
கீதாம்ருதமே ஓடிவாயோ ஹ்ருதயானந்தமே ஆடிவாயோ
(சலங்கை)

# விஷமக்கார கண்ணன்!

விஷமக்கார கண்ணன் பொல்லாத விஷமக்கார கண்ணன்
வேடிக்கையாய் பாட்டுபாடி
விதவிதமாய் ஆட்டமாடி
நாழிக்கொரு லீலைசெய்யும்
நந்தகோபால க்ருஷ்ணன் (விஷ)

நீலமேகம் போல் இருப்பான் – பாடினாலோ
நெஞ்ஜில் வந்து குடியிருப்பான்
கோல புல்லாங்குழலூதி கோபிகளைக் கொள்ளையாடி
கொஞ்ஜீம்போது வெண்ணய்தாடி என்றுகேட்டி ஆட்டமாடும் (விஷ)

பின்னலைப் பின்னாடி இழப்பான் – ஏதோ
பேசிப்பேசி ஜாடைகாட்டி அழைப்பான்
என்னத்துக்குப் பின்னலை நீ இழத்ததென்னடா என்றால்
கண்ணழகு ஏண்டி எந்தன் கருத்தை இழுத்த தென்பான் (விஷ)

பக்கத்து வீட்டுப் பெண்ணை அழைப்பன் முகாரிராகம்
பாடச்சொல்லி வம்புக் கிழப்பான்
முகாரிராகமா எனக்கது தெரியாதென்றால்
நெக்கருகக் கிள்ளி விட்டவள் விக்கி
விக்கி அழும்போது இதாண்டி முகாரி என்பான் (விஷ)

வெண்ணைப்பானை மூடக்கூடாது உரியிலுள்ள
வெண்ணைப்பானை மூடக்கூடாது
இவன்வந்து விழுங்கினாலும் கேட்க்ககூடாது
இவன் அம்மாகிட்ட சொல்லக்கூடாது
சொல்லிவிட்டால் அட்டகாசம் தாங்க வொண்ணாது (விஷ)

சும்மா ஒரு பேச்சுகாலும் திருடனென்று சொல்லிவிட்டால்
அம்மா பாட்டி அத்தை தாத்தா அத்தனையும்
திருடனென்பான் (விஷ)

# ராதேகோவிந்தா!

ராதே ! ராதே ! ராதே ! ராதே ! ராதேகோவிந்தா !

பிருந்தாவன சந்தா! அநாத நாதா! தீன பந்தோ! ராதேகோவிந்தா!

நந்தா குமாரா! நவநீத சோரா! ராதேகோவிந்தா! (பிருந்தா)
புராண புருஷா புண்ய ஸ்லோகா ராதேகோவிந்தா! (பிருந்தா)
வேணுவிலோலா! விஜயகோபாலா! ராதேகோவிந்தா! (பிருந்தா)

பண்டரி நாதா! பாண்டு ரங்கா! ராதேகோவிந்தா! (பிருந்தா)
ஜெய்ஜெய் விட்டலா! ஜெயஹரி விட்டலா! ராதேகோவிந்தா! (பிருந்தா)

## குறை ஒன்றும் இல்லை

குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா (குறை)

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா
வேண்டியதை தந்திட வேங்கடேசன் என்றிருக்க
வேண்டியது வேறில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா

திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா -
உன்னை மறை ஓதும் ஞானியர் மட்டுமே காண்பார்
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா
குன்றின் மேல் கல்லாகி நிற்கின்ற வரதா
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா

கலிநாளுக்கிரங்கி கல்லிலே இறங்கி
நிலையாக கோவிலில் நிற்கின்றாய் கேசவா
யாதும் மறுக்காத மலையப்பா - உன் மார்பில்
ஏதும் தர நிற்கும் கருணைக் கடல் அன்னை
என்றும் இருந்திட ஏது குறை எனக்கு
ஒன்றும் குறை இல்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா

# வேங்கடேச சுப்ரபாதம்

கௌசல்யா சுப்ரஜா ராம
பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நர ஸார்தூல
கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்

உத்திஷ்டோத்திஷ்ட கோவிந்த
உத்திஷ்ட கருடத்வஜ
உத்திஷ்ட கமலா காந்தா
த்ரைலோக்யம் மங்களம் குரு

மாத சமஸ்த ஜகதாம் மது கைடபாரே
வக்ஷோ விஹாரிணி மனோகர திவ்ய மூர்த்தே
ஸ்ரீ ஸ்வாமினி, ச்ரிதஜன ப்ரிய தான சீலே
ஸ்ரீ வேங்கடேச தயிதே தவ சுப்ரபாதம்
தவ சுப்ரபாதம் அரவிந்த லோசனே
பவது பிரசன்ன முக சந்திர மண்டலே
விதி சங்கரேந்திர வனிதாபிர் அர்ச்சிதே
விருஷ சைலநாத தயிதே தயாநிதே

அத்ரிஆதி சப்தரிஷய சமுபாஸ்ய சந்த்யாம்
ஆகாச சிந்து கமலானி மனோகரானி
ஆதாய பாதயுகம் அர்ச்சயிதும் ப்ரபந்நா
சேஷாத்ரி சேகரவிபோ தவ சுப்ரபாதம்

பஞ்சானன ஆப்ஜபவ சண்முக வாசவாத்யா
த்ரைவிக்ரமாதி சரிதம் விபுதா ச்துவந்தி
பாஷாபதி படதி வாசர சுத்திமாராத்
சேஷாத்ரி சேகரவிபோ தவ சுப்ரபாதம்

ஈஷத் ப்ரபுல்ல சரசீருஹ நாரிகேள
பூகத்ருமாதி சு மநோகர பாலிகாநாம்
ஆவாதி மந்த மநிலஸ் சக திவ்யகந்தை
சேஷாத்ரி சேகர விபோ தவ சுப்ரபாதம்

உந்மீல்ய நேத்ர யுக முத்தம பஞ்ஜரஸ்தா
பாத்ரா வசிஷ்ட கதலீபல பாயசாநி

புக்த்வா சலீலமத கேளிசுகா: படந்தி
சேஷாத்ரி சேகரவிபோ தவ சுப்ரபாதம்

தந்த்ரீ ப்ரகர்ஷ மதுர ஸ்வநயா விபஞ்ச்யா
காயத்ய நந்த சரிதம் தவ நாரதோபி
பாஷாச மக்ர அசக்ருத் கரசார ரம்யம்
சேஷாத்ரி சேகர விபோ தவ சுப்ரபாதம்

ப்ருங்காவலீ ச மகரந்த ரஸா நுவித்த
ஜங்கார கீத நிநதைஸ் சக சேவநாய
நிர்யாத்யு பாந்த சரஸீ கமலோ தரேப்ய
சேஷாத்ரி சேகர விபோ தவ சுப்ரபாதம்

யோஷா கணேன வரதத்னி விமத்ய மானே
கோசால யேஷூ ததி மந்தன தீவ்ர கோஷா
ரோஷாத் கலிம் விததே ககுபஸ்ச கும்பா
சேஷாத்ரி சேகர விபோ தவ சுப்ரபாதம்

பத்மேச மித்ர சதபத்ர கதாலி வர்க்கா
ஹர்த்தும் ச்ரியம் குவலயஸ்ய நிஜாங்க லக்ஷ்ம்யா
பேரீ நிநாத மிவ பீப்ரதி தீவ்ர நாதம்
சேஷாத்ரி சேகர விபோ தவ சுப்ரபாதம்

ஸ்ரீ மந் அபீஷ்ட வரதாகில லோக பந்தோ
ஸ்ரீ ஸ்ரீநிவாச ஜகதேக தயைக சிந்தோ
ஸ்ரீ தேவதா க்ருஹ புஜாந்தர திவ்ய மூர்த்தே
ஸ்ரீ வேங்கடாசலபதே தவ சுப்ரபாதம்

ஸ்ரீ சுவாமி புஷ்கரிணி- காப்லவ நிர்மலாங்கா
ச்ரேயோர் திநோ, ஹர விரிஞ்சி சனந்தன ஆத்யா
த்வாரே வசந்தி வரவேத்ர ஹதோத்த மாங்கா:
ஸ்ரீ வேங்கடாசலபதே தவ சுப்ரபாதம்

ஸ்ரீ சேஷசைல கருடாசல வேங்கடாத்ரி
நாராயணாத்ரி வ்ருஷபாத்ரி வ்ருஷாத்ரி முக்யாம்
ஆக்யாம் த்வதீய வசதே ரநிசம் வதந்தி
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

சேவாபரா: சிவ சுரேஷ க்ருசானு தர்ம
ரக்ஷோம்பு நாத பவமான தனாதி நாதா
பத்தாஞ்ஜலி ப்ரவிலசந் நிஜ சீர்ஷ தேசா:
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

தாடீஷூதே விஹக ராஜ மிருகாதி ராஜ
நாகாதி ராஜ கஜ ராஜ ஹயாதி ராஜா
ஸ்வஸ்வ அதிகார மஹி மாதிகம் அர்தயந்தே
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

தாடீஷூதே விஹக ராஜ மிருகாதி ராஜ
நாகாதி ராஜ கஜ ராஜ ஹயாதி ராஜா
ஸ்வஸ்வ அதிகார மஹி மாதிகம் அர்தயந்தே
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

த்வத் பாத தூளி, பரித ஸ்புரித உத்தமாங்கா
சுவர்கா அபவர்க நிரபேக்ஷ, நிஜாந்த ரங்கா!
கல்ப ஆகம ஆகலநயா ஆகுலதாம் லபந்தே
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

த்வத் கோபுர ஆக்ர சிகராணி, நிரீக்ஷ மாணா
ஸ்வர்கா அபவர்க பதவீம், பரமாம் ச்ரயந்த!
மர்த்யா மநுஷ்ய புவனே, மதி மாச்ரயந்தே
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்!
ஸ்ரீ பூமி நாயக தயாதி குண அம்ருத ஆப்தே
தேவாதி தேவ ஜகத் ஏக சரண்ய மூர்த்தே
ஸ்ரீமந் அனந்த கருடாதிபிர் அர்ச்சி தாங்க்ரே
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

ஸ்ரீ பூமி நாயக தயாதி குண அம்ருத ஆப்தே
தேவாதி தேவ ஜகத் ஏக சரண்ய மூர்த்தே
ஸ்ரீமந் அனந்த கருடாதிபிர் அர்ச்சி தாங்க்ரே
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

ஸ்ரீ பத்மநாப புரு÷ஷாத்தம வாசுதேவ
வைகுண்ட மாதவ ஜனார்த்தன சக்ர பாணே

ஸ்ரீ வத்ஸ சிஹ்ன சரணாகத பாரிஜாத
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

கந்தர்ப்ப தர்ப்ப ஹர சுந்தர திவ்ய மூர்த்தே
காந்தா குசாம் புருஹ குட்மல லோல த்ருஷ்டே
கல்யாண நிர்மல குணாகர திவ்ய கீர்த்தே
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

மீனாக்ருதே- கமட- கோல- ந்ருசிம்ம- வர்ணிந்ஸ்வாமிந்-
பரஸ்வத தபோதன- ராமசந்திர-
சேஷாம்ச ராம- யது நந்தன- கல்கி ரூப-
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

ஏலா லவங்க கனசார சுகந்தி தீர்த்தம்
திவ்யம் வியத்சரிதி ஹேம கடேஷூ பூர்ணம்
த்ருத் வாத்ய வைதிக சிகாமணய ப்ருஹ்ருஷ்டா
திஷ்டந்தி வேங்கட பதே தவ சுப்ரபாதம்

பாஸ்வான் உதேதி விகசாநி சரோருகானி
சம்பூர யந்தி நினதை ககுபோ விகங்கா
ஸ்ரீவைஷ்ணவா சததம் அர்த்தித மங்களாஸ்தே
தாமாச்ரயந்தி தவ வேங்கட சுப்ரபாதம்

பிரம்மா ஆதய சுரவரா ச மகர்ஷ யஸ்தே
சந்தஸ் சனந்தன முகாஸ் தவ யோகி வர்யா
தாமாந்திகே தவஹி மங்கள வஸ்து ஹஸ்தா
ஸ்ரீ வேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

லஷ்மீ நிவாச நிரவத்ய குணைக சிந்தோ
சம்சார சாகர சமுத்தர அறைக சேதோ
வேதாந்த வேத்ய நிஜ வைபவ பக்த போக்ய
ஸ்ரீவேங்கடாசல பதே தவ சுப்ரபாதம்

இத்தம் விருஷாசல பதே, இக சுப்ரபாதம்
யே மானவா, ப்ரதி தினம் படிதும் ப்ர-விருத்தா
தேஷாம் பிரபாத சமயே, ஸ்மிருதி ரங்க பாஜாம்
பிரஜ்ஞாம், பர ஆர்த்த சுலபாம், பரமாம் ப்ரசுதே

# ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்தோத்திரம்

கமலா குச சூசுக குங்குமதோ
நியதாருணி தாதுல நீல தனோ
கமலாயத லோசன லோக பதே
விஜயீ-பவ வேங்கட சைல பதே

ச-சதுர்முக சண்முக பஞ்ச முக
பிரமுகாகில தைவத மௌலி மனே
சரணாகத வத்சல சார நிதே
பரிபாலயமாம் விருஷ சைல பதே!

அதி வேல தயா தவ துர்விஷைஹர்
அனு வேல க்ருதைர் அபராத சதை:
பரிதம் த்வரிதம் வ்ருஷ சைல பதே!
பரயா க்ருபயா பரிபாஹி ஹரே!

அதி வேங்கட சைலம் உதாரம தேர்
ஜன தாபி மதா திக, தான ரதாத்
பர தேவ தயா, கதி தாந் நிகமை:
கமலா தயிதாந் ந பரம் கலயே!

கல வேணு ரவா, வச கோப வதூ
சத கோடி வ்ருதாத், ஸ்மர கோடி ஸமாத்!
ப்ரதி வல்லவிகா அபி மதாத் சுகதாத்
வசுதேவ சுதாந் ந பரம் கலயே!!

அபி ராம, குணா கர, தாசரதே!
ஜக தேக தநுர் தர, தீர மதே
ரகு நாயக, ராம, ரமேச, விபோ!
வரதோ பவ! தேவ, தயா ஜலதே

அவனி தனயா கமநீய கரம்
ரஜநீ கர சாரு முக அம்-புருஹம்
ரஜநீ சர ராஜ தமோ மிகிரம்
மகநீயம் அகம் ரகுராம மயே

கல வேணு ரவா, வச கோப வதூ
சத கோடி வ்ருதாத், ஸ்மர கோடி ஸமாத்!
ப்ரதி வல்லவிகா அபி மதாத் சுகதாத்
வசுதேவ சுதாந் ந பரம் கலயே!!

விநா வேங்கடேசம் ந நாதோ ந நாத
சதா வேங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி
ஹரே வேங்கடேச ப்ரசீத ப்ரசீத
ப்ரியம் வேங்கடேச ப்ரயச்ச ப்ரயச்ச

அகம் தூர தஸ் தே பதாம்போஜ யுக்ம
ப்ரணாம் இச்சய ஆகத்ய சேவாம் கரோமி
சக்ருத் சேவயா நித்ய சேவா பலம் த்வம்
ப்ரயச்ச ப்ரயச்ச ப்ரபோ வேங்கடேச

அக்ஞானினா மயா தோஷான்
அ சேஷாந் விகிதாந் ஹரே
க்ஷம ஸ்வ த்வம் க்ஷம ஸ்வ த்வம்
சேஷ சைல சிகா மணே!

## வெங்கடேச சுப்ரபாதம் - தமிழில்

வந்துதித்தாய் ராமா நீ கோசலை தன் திருமகனாய்
சிந்து மொழிச் சிறுகாலை திசையெங்கும் புலர்கிறது
மந்திரங்கள் வாய்மொழிந்து வந்தனைகள் புரிந்தருளச்
செந்திருக்கண் அருள்பொழிய வேங்கடவா எழுந்தருள்வாய் 1

எழுந்தருள்வாய் வெண்கருடக் கொடியுடையாய் எழுந்தருள்வாய்
எழுந்தருள்வாய் திருக்கமலை விழைமார்பா எழுந்தருள்வாய்
எழுந்தருள்வாய் மூவுலகும் காத்தருள எழுந்தருள்வாய்
எழுந்தருள்வாய் கோவிந்தா வேங்கடவா எழுந்தருள்வாய் 2

போர்புரிந்து மதுகைடர் தமையழித்தான் உளத்தொளியே
பாரனைத்தும் காத்தளிக்கும் பேரழகின் அருள் உருவே
பாரகத்தார் விழைந்தேத்தும் சீர்சீலப் பெருந்தாயே
கார்வண்ண வேங்கடத்தான் திருத்தேவி எழுந்தருள்வாய் 3

திங்கள் மொழி திருமுகத்தில் பொங்கும் அருள் புரிபவளே
இந்துகலை வாணியுடன் இந்திராணி அம்பிகையாம்
மங்கையர்கள் தொழுதேத்தும் மாண்புடைய தனித்தலைவி
செங்கமல வேங்கடத்தான் திருத்தேனி எழுந்தருள்வாய் 4

தொலைவிடத்தும் பலவிடத்தும் கழன்று திரி ஏழ்முனிவர்
சலித்தறியாத் தவமியற்றிச் சந்தியா வந்தனம் முடித்து
நிலைபெறு றின் புகழ் சொல்லி நின்பாதம் சேவித்து
மலையடைந்து காத்துளர் காண் வேங்கடவா எழுந்தருள்வாய் 5

ஆங்கந்த பிரம்மாவும் அறுமுகனும் தேவர்களும்
ஓங்கி உலகங்களந்த உயர் கதைள் பாடுகின்றார்
ஈங்கிந்த வியாழமுனி பஞ்சாங்கம் ஓதுகின்றார்
தீங்கவிகள் செவிமடுக்க வேங்கடவா எழுந்தருள்வாய் 6

நன் கமுகு தென்னைகளில் பாளை மணம் மிகுந்தனவால்
பல் வண்ண மொட்டுகள் தாம் பனித்தேனோடு அலர்ந்தனவால்
புல்லரிக்கும் மெல்லீரப் பூந்தென்றல் தவழ்கிறதால்
எல்லாமும் அணிந்தருள வேங்கடவா எழுந்தருள்வாய் 7

நின் திருப்பேர் பல கேட்டு நின்னடியார் மெய்மறக்க
நின் கோயில் பைங்கிளிகள் தீங்கனியாம் அமுதருந்தி
நின் திருப்பேர் ஆயிரத்தால் நெடும் புகழை விளக்கிடுமாய் நின்
செவியால் கேட்டருள வேங்கடவா எழுந்தருள்வாய் 8

எவ்விடத்தும் நிலையாக நின்றறியா நாரதரும்
இவ்விடத்து உம் பெருமைகள் தாம் ஈர்ப்பதனால் நிலைகொண்டார்
செவ்விய தன் வீணையில் உன் திருச் சரிதை மீட்டுகின்றார்
அவ்விசையை கேட்டருள வேங்கடவா எழுந்தருள்வாய் 9

வெண்கமல ஒண்மலர்கள் விளைத்த மது மிக அருந்தி
கண் மயங்கி மலர் முகட்டுள் காலைவரை சிறைகிடந்த
வண்டினங்கள் ரீங்கரித்தே வந்தனவா நினைத் தொழவே
தண்ணருளால் சேவைதர வேங்கடவா எழுந்தருள்வாய் 10

தனதனங்கள் நிமர்ந்த செயற் கைவளைகள் ஒலியெழுப்ப
மன மகிழந்து தயிர்கடையும் மத்தொலியும் திசை ஒலியும்
சிறந்தனபோல் எதிர் ஒலிக்க நெடுந்துதிகள் முழங்கிடுமால்

நினைத்துவிதாம் கேட்டிலையோ வேங்கடவா எழுந்தருள்வாய் 11

பெருமாள் நின் திருநிறத்தை பெற்றுளதாய் குவளை சொலும்
கருங்குவளைக் காட்டிடையே களித்துலவும் வண்டுகள் தாம்
பெருமாள் நின் திருநிறத்தை பெற்றுளம் யாம் பெரிதெனுமே
வருதரும் பேர் பகை தவிர்க்க வேங்கடவா எழுந்தருள்வாய் 12

வேண்டுபவர் வேண்டுவன விழைந்தருளும் பெருவரதா
மாண்புடையாள் மலரமர்ந்தாள் மகிழ்ந்துறையும் திருமார்பா
ஈண்டுலகம் அனைத்தினொடும் இயைந்தமைந்த உறவுளயோய்
காண்பரிய கருணையனே வேங்கடவா எழுந்தருள்வாய் 13

மின் தவழும் சடையானும் பிரம்மாவும் சனந்தனரும்
இன்றுனது கோலேறி திருத்தீர்த்தம் தலை மூழ்கி
நின்னருளைப் பெற விழைந்தே நெடுவாயில் நிலைநின்றார்
நின்றவர்க்கும் அருள் பொழிய வேங்கடவா எழுந்தருள்வாய் 14

திருமலையாய் சேடத்தாய் கருடத்தாய் வேங்கடத்தாய்
திரு நாராயண மலையாய் விருடபத்தாய் இருடத்தாய்
பெருமானே எனப்புகழ்ந்து தேவரெலாம் திரண்டனர் காண்
திரண்டுளரைப் புரந்தருள வேங்கடவா எழுந்தருள்வாய் 15

அருளிடு நின் செயல் முடிப்பான் அட்டதிக்கு பாலர்களாம்
பெருநெறிய அரன் இந்திரன் அக்னியான் பேரியமன்
வருணனொடு நைருதியான் வாயுவோடு குபேரனும்
நின் திருவடிக்கு காத்துளரால் வேங்கடவா எழுதருள்வாய் 16

திருமலைவாழ் பெருமானே திருஉலாவுக்கு எழுகையில் நின்
கருட நடை சிம்ம நடை நாக நடை முதலாய
திருநடைகள் சிறப்பும் (உ)ணர்ந்து திருத்தமுறக் கற்பதற்கு
கருட சிம்ம நாகருளார் வேங்கடவா எழுந்தருள்வாய் 17

சூரியனார் சந்திரனார் செவ்வாயாம் புதன் வியாழன்
சீர்மிகுந்த சுக்கிரனார் சனி ராகு கேது இவர்கள்
ஆர்வமுடன் நின் தொண்டர்க்கு அடித்தொண்டு புரிந்துனது
பேரருளைப் பெற நின்றார் வேங்கடவா எழுந்தருள்வாய் 18

நின் முக்தி விழையால் நின்னையொன்றே மிகவிழைந்து
நின் பாத தூளிகளைத் தம் தலையில் தான் தரித்தோம்

சென்றிடுவாய் கலிமுடிந்தால் இங்கிருந்தும் பரமபதம்
என்பதற்கே அஞ்சினர்காண் வேங்கடவா எழுந்தருள்வாய் 19

எண்ணரிய தவமியற்றிய இன்சொர்க்கம் முக்தி பெறும்
புண்ணியர்கள் செல்வழி நின்புகழ்க் கோயில் கலசங்கள்
கண்டனரே நின் கோயில் காட்சிக்கே பிறப்பெடுப்பார்
புண்ணியனே அவர்க்கருள வேங்கடவா எழுந்தருள்வாய் 20

மண்மகளின் திருக்கேள்வா மாக்கருணை குணக் கடலே
திண்புயத்துக் கருடனுடன் நாகனுமே சரண்புகுந்தார்
எண்ணரிய தேவர்களில் ஈடு இணையில் பெருந்தேவா
மண்ணுலகோர் தனிப் புகலே வேங்கடவா எழுந்தருள்வாய்
21

பத்மநாபா புருடோத்தமா வாசுதேவா வைகுண்டா
சத்தியனே மாதவனே ஜனார்தனனே சக்ரபாணி
வத்சலனே பாரிஜாதப் பெருமலர் போல் அருள்பவனே
உத்தமனே நித்தியனே வேங்கடவா எழுந்தருள்வாய் 22

திருமகள் தன் திருஅணைப்பில் திருத்துயில் கொள் திருஅழகா
திருவிழியால் பெரு உலகில் அருள் பொழியும் பெருவரதா
திருவுடையாய் தீக்குணத்தாய் திருத்தூயாய் திருப்புகழாய்
பெருவயிரத் திருமுடியாய் வேங்கடவா எழுந்தருள்வாய் 23

மச்சநாதா கூர்மநாதா வராகநாதா நரசிம்ஹா
நச்சி வந்த வாமனனே பரசுராமா ரகுராமா
மெச்சு புகழ் பலராமா திருக்கண்ணா கல்கியனே
இச்சகத்து வைகுந்தா வேங்கடவா எழுந்தருள்வாய் 24

ஏல முது நடு லவங்க கணசார மணங்கமழும்
சீலமிகு தெய்வீகத் திருதீர்த்தம் தலை சுமந்து
ஞாலமுய்ய வேதமொழி நவற்றுணர்ந்த வேதியர்கள்
கோலமிகு கோயிலுற்றார் வேங்கடவா எழுந்தருள்வாய் 25

அருணனுந்தான் வந்துதித்தான் அலர்ந்தனவால் தாமரைகள்
பெருவியப்பால் புள்ளினங்கள் பெயர்ந்தெழுந்து சிலம்பினகாண்
திருமார்பா வைணவர்கள் மங்களங்கள் நிற மொழிந்தார்
அருள் திருவே அருள்விருந்தே வேங்கடவா எழுந்தருள்வாய் 26

நாமகள்தன் நாயகனும் தேவர்களும் மங்களமாம்

காமரியைக் கண்ணாடித் தாமரைகள் சாமரங்கள்
பூமருது பொன் விளக்குப் புகழ்க் கொடிகள் ஏந்தினர்காண்
தே மருவு மலர் மார்பா வேங்கடவா எழுந்தருள்வாய் 27

திருமார்பா பெருங்குணங்கள் சிறந்தோங்கப் பொலிபவனே
பெரும்பிறவிக் கருங்கடலின் கரைபுனர்க்கும் சேர்க்கும் இணையே
ஒரு வேதத்து உட் பொருளே மயர்வு அறியா மதி நலத்தார்
திருத் தீர்ப்புக்கு உரியவனே வேங்கடவா எழுந்தருள்வாய் 28

விழித்து எழுந்தக் காலையில் இத்திருப்பள்ளியெழுச்சிதனை
விழைந்துணர்ந்து படிப்பவரை கேட்பவரை நினைப்பவரை
வழுத்துகின்றார் எவரவர்க்கு வரங்களொடு முக்தி தர
எழுந்தருள்வாய் எழுந்தருள்வாய் வேங்கடவா எழுந்தருள்வாய் 29

## பஜகோவிந்தம் பஜகோவிந்தம்

பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
.பஜகோவிந்தம் மூடமதே |
சம்ப்ராப்தே சந்நிஹிதே காலே
நஹிநஹி ரக்ஷதி டுக்ரிங்கரணே

*துதி கோவிந்தனை,துதிகோவிந்தனை ,*
*கதி கோவிந்தனே, மடமதியே!*
*கதவினைக்காலன் தட்டிடும் நேரம்*
*உதவிடுமோ உந்தன் இலக்கண ஞானம் ?*

மூட ஜஹீஹி தனாகம த்ருஷ்ணாம்
.குரு சத்புத்தி மனசி வித்ருஷ்ணாம் |
யல்லபசே நிஜகர்மோபாத்தம்
.வித்தம் தேன விநோதயசித்தம் ||

*மூடா!பொன்பொருள் மோகம் அறுப்பாய் ;*
*நாடுவாய் மெய்ப்பொருள் நிர்மல நெஞ்சால்;*
*பாடுபட்டுழைத்து நீதேடிடும் தனத்தால்*
*கூடிடும் சுகத்துடன் குறையின்றி வாழ்வாய்.*

யாவத்வித்தோபார்ஜனசக்த--
ஸ்தாவன்நிஜபரிவாரோ ரக்த :|
பச்சாஜ்ஜீவதி ஜர்ஜரதேஹே
வார்த்தா கோபி ந ப்ருச்சதி கேஹே ||

*சம்பாதித்திடும் தெம்புள்ளவரையில்*

*அன்பைப் பொழிந்திடும் உன்பரிவாரம்,*
*ஓடாய் உழைத்துநீ ஓய்ந்திடும் நேரம்*
*வேண்டாதவனாய் ஒதுக்கிடும் உன்னை.*

மா குரு தனஜன யௌவன கர்வம்
ஹரதி நிமேஷத்கால : சர்வம் |
மாயாமயமிதமகிலம் ஹித்வா
ப்ரம்ஹபதம் த்வம் பிரவிஷா விதித்வா ||

*பணம்,படை,இளமையால் ஆணவம் வேண்டாம் ;*
*கணத்தினிலழிபவை இவையென அறிவாய் ;*
*மாயாமயமிந்த வாழ்வென உணர்ந்தே*
*தூயப்ரம்ம நிலைதனை யடைவாய் .*

சுரமந்திரதரு மூலநிவாசஹ
ஷய்யாமூதலமஜினம் வாசஹ |
ஸர்வப்பரிக்ரஹமோகத்யாகஹ
கஸ்ய சுகம் ந கரோதிவிராகஹ ||

*உறங்கிட ஆலயமும் மரநிழலும் ;*
*உடலினை மூடுவதோ தோலாடை ;*
*இங்ஙனம் யாவும் துறந்தவர் மனத்தில்*
*பொங்கிடும் மகிழ்ச்சி மங்குவதேது ?*

பகவத்கீதா கிஞ்சித தீதா
கங்காஜலலவகணிகா பீதா |
சக்ருதபி ஏன முராரி சமர்ச்சா
த்ரியதே தஸ்ய யமேன ந சர்ச்சா ||

*சில வரியேனுங் கீதை படிப்போரும்,*
*துளியேனுங் கங்கை நீர் குடிப்போரும்,*
*அரங்கனைக் கணமேனுந் துதிப்போரும்,*
*கலங்குவதில்லை கூற்றுவன் வரினும்.*

புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனிஜடரே சயனம் |
இஹ சன்சாரே பஹுதுஸ்தாரே
க்ருபயா பாரே பாஹி முராரே ||

*மாண்டபின் ஜனனம்;மறுபடி மரணம் ;*
*மீண்டுந்தாயின் கருப்பையிலுறக்கம்;*
*பிறவிக்கடலிதைக் கடப்பது கடினம்;*
*கரை சேர்த்தருள்வாய் ,முராரி!சரணம் .*

கேயம் கீதா நாம சஹஸ்ரம்

த்யேயம் ஸ்ரீபதிரூபமஜஸ்ரம் |
நேயம் சஜ்ஜன சங்கே சித்தம்
தேயம் தீனஜனாய ச வித்தம் ||

*கீதையும்,அரங்கனின் ஆயிரம்பேரும்*
*ஓதி நினைப்பாய் கமலையின் பதியை;*
*நிதம் நாடிடுவாய் நல்லோர் நட்பை;*
*இதயங்குளிர்வாய் இல்லார்க்கீந்தே!*

அர்த்தமனர்த்தம் பாவய நித்யம்
நாஸ்தி தத ஹ சுகலேஷஹ சத்யம் |
புத்ராதிபி தனபாஜாம் பீதிஹி
சர்வத்ரைஷா விஹிதா ரீதிஹி ||

*செல்வத்தால் தொல்லையே சுகமென்றுமில்லை;*
*உள்ளத்திலுறுதியாய்ப் பதி இவ்வுண்மையை.*
*தனயனும் சொத்தால் உன்பகையாவான் .*
*மனித இயல்பிதை மறந்திடவேண்டாம் .*

குருசரணாம்புஜ நிற்பர பக்தஹ
சம்சாராதசிராத்பவமுக்தஹ |
செந்த்ரியமானச நியமாதேவம்
த்ரக்ஷ்யசி நிஜஹ்ருதயச்தம் தேவம்

*குருவின் பதகமலம் பற்றிய பக்தா!*
*அறநெறி நின்று, ஐம்புலனடக்கி*
*விடுபடு பிறவிப் பிணியிலிருந்து ;*
*உணர்ந்திடுன்னுளமுறை பரம்பொருள்தன்னை!*

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

ஹரி:ஓம்

ஶுக்லாம் பரதரம் விஷ்ணும் ஸஸிவர்ணம் சதுர்புஜம் ।
ப்ரஸந்நவவதநம் த்யாயேத் ஸர்வ விக்நோபஸாந்தயே ॥ 1

யஸ்ய த்விரத வக்த்ராத்யா :பாரிஷத்யா :பரஸ்ஸதம் ।
விக்நம் நிக்நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் தமாஸ்ரயே ॥ 2

வியாஸம் வஸிஷ்ட நப்தாரம் ஸக்தே :பௌத்ர மகல்மஷம் ।
பராஸராத்மஜம் வந்தே ஶுகதாதம் தபோநிதிம் ॥ 3

வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே ।
நமோ வைப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோ நம: ॥ 4

அவிகாராய ஸுததாய நித்யாய பரமாத்மநே ।
ஸதைகரூப ரூபாய விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே ॥ 5

யஸ்ய ஸ்மரண மாத்ரேண ஜந்ம ஸம்ஸார பந்தநாத் ।
விமுச்யதே நமஸ் தஸ்மை விஷ்ணவே ப்ரப விஷ்ணவே ॥ 6

ஓம் நமோ விஷ்ணவே ப்ரப விஷ்ணவே ॥
ஸீ வைஸம்பாயந உவாச -

ஸ்ருத்வா தர்மா நஸேஷேண பாவநாநி ச ஸர்வஷ :
யுதிஷ்டிரஸ் ஸாந்தநவம் புநரேவாப்யபாஷத ॥ 1

யுதிஷ்டிர உவாச -

கிமேகம் தைவதம் லோகே கிம் வாப்யேகம் பராயணம் ।
ஸ்துவந்த:கம் கமர்சந்த:ப்ராப்நுயுர் மாநவாஸ் ஸுபம் ॥ 2

கோ தர்மஸ் ஸர்வ தர்மாணாம் பவத: பரமோமத: ।
கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்ம ஸம்ஸார ப்தநாத் ॥ 3

ஸீ பீஷ்ம உவாச -

ஜகத் ப்ரபும் தேவதேவம் அநந்தம் புருஷோத்தமம் ।
ஸ்துவந் நாம ஸஹஸ்ரேண புரஷ ஸ் ஸததோத்தித :॥ 4

தமேவ சார்சயந்நித்யம் பக்த்யா புருஷ மவ்யயம் ।
த்யாயந் ஸ்துவந் நமஸ்யம்ஸ்ச யஜமாநஸ் தமேவ ச॥ 5

அநாதி நிதநம் விஷ்ணும் ஸர்வலோக மஹேஸ்வரம் ।
லோகத்யகஷம் ஸ்துவந் நிதயம் ஸர்வது:காதிகோ பவேத் ॥ 6

ப்ரஹ்மண்யம் ஸர்ம தர்மஜ்ஞும் லோகாநாம் கீர்த்தி வர்த்தநம் ।
லோகநாதம் மஹத்பூதம் ஸர்வபூத பவோத்பவம் ॥ 7

ஏஷ மே ஸர்வ தர்மாணாம் தர்மோஉதிகதமோ மத: ।
யத்பக்த்யா புண்டரீகாகஷம் ஸ்தவை ரர்சேந் நரஸ்ஸதா ॥ 8

பரமம் யோ மஹத்தேஜ:பரமம் யோ மஹத்தப: ।
பரமம் யோ மஹத் ப்ரஹ்ம பரமம் ய:பராயணம் ॥ 9

பவித்ராணாம் பவித்ரம் யோ மங்களாநாம் ச மங்களம் ।

தைவதம் தேவதாநாஞ்ச பூதாநாம் யோஉவ்யய:பிதா ॥ 10

யதஸ் ஸர்வாணி பூதாநி பவந்த்யாதி யகாகமே ।
யஸ்மிம்ஸ்ச ப்ரளயம் யாந்தி புநரேவ யுககஷயே ॥ 11

தஸ்ய லோக ப்ரதாநஸ்ய ஜகந்நாதஸ்ய பூபதே ।
விஷ்ணோர் நாம ஸஹஸ்ரம் மே ஸ்ருணு பாப பயாபஹம் ॥ 12

யாநி நாமாநி கெளணாநி விக்யாதாநி மஹாத்மந : !
ருஷிபி பரிகீதாநி தாநி வகஷ்யாமி பூதயே !! 13

ருஷிர் நாம்நாம் ஸஹஸ்ரஸ்ய வேத வ்யாஸோ மஹாமுநி : !
ச்சந்தோனுஷ்டுப் ததாதேவோ பகவாந் தேவகீ ஸூத: !! 14

அம்ருதாம்ஸூத்பவோ பீஜம் ஸக்திர் தேவகநந்தந : !
த்ரிஸாமா ஹ்ருதயம் தஸ்ய ஸாந்த்யர்த்தே விநியுஜ்யதே !! 15

விஷ்ணும் ஜிஷ்ணும் மஹாவிஷ்ணும் ப்ரபவிஷ்ணும் மஹேஸ்ரம்!
அநேக ரூப தைத்யாந்தம் நமாமி புருஷோத்தமம் !! 16

அஸ்ய ஸீ விஷணோர் திவ்ய ஸஹஸ்ரநாம ஸ்தோதர மஹா மந்த்ரஸ்ய!
ஸீ வேத வ்யாஸோ பகவாந் ருஷி: !

அநுஷ்டுப் ச்ச்ந்த:!
ஸீ மஹா விஷ்ணு: பரமாத்மா ஸீமந் நாராயணோ தேவதா !
அம்ருதாம்ஸூத்பவோ பாநுருதி பீஜம் !
தேவகீ நந்தநஸ் ஸ்ரஷ்டேதி ஸக்தி :!
உத்பவ: ஷோபணோ தேவ இதி பரமோ மந்த்ர: !
ஸங்க்க ப்ருந் நந்தகி சக்ரீதி கீலகம் !
ஸார்ங்க தந்வா கதாதர இத்யஸ்த்ரம் !
ரதாங்கபாணி ரகோஷப்ய இதி நேத்ரம் !
ஸாமகஸ் ஸாமேதி கவசம் !
ஆநந்தம் பரப்ரஹ்மேதி யோநி: !

ருதுஸ் ஸூதர்ஸந:கால இதி திக்பந்த:!

ஸீ விஸ்வ ரூப இதி த்யாநம் !
